திருச்செந்தூர் தல புராணம்



உ

ஓம் குகாய நம.

திருச்செந்தூர்

தல புராணம்.



தொகுப்பாளர்:

திருச்செந்தில் ஸ்தானிகரும் முருகனடியாருமான

திரு. T. S. கணபதி சாஸ்திரிகள் அவர்கள்

*

நாகர்கோவில் டாஸ் அச்சகத்தில்
அச்சியற்றப்பெற்றது.

*

 [விலை 8 அணா

முன்னுரை

முருகப் பெருமான் கோவில் கொண்டிடிருக்கும் முக்கிய தலங்கள் ஆறுபடைவீடுகள் எனப்படும். இவ்வாறு படைவீடுகளில் மிகச் சிறந்து விளங்குவது திருச்செந்தூர். சங்க காலத்திலிருந்த நக்கீரரும், ஆதிசங்கரரும் இத் தலத்தின் மகிமையை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பாடியுள்ளனர் என்பது இதன் பழமையை நன்கு விளக்கும். கடந்த ஆண்டு இத்தலபுராணத்தின் முதற் பதிப்பு என்னால் வெளியிடப்பட்டது. இந்த இரண்டாம் பதிப்பில் இத்தலம் பற்றிப் பாடப் பெற்ற பாடல்களும், ஆண்டவன் கோவிலில் "சண்முக விலாசத்தில்" எழுதப்பட்டுள்ள பாடல்களும், ஆண்டவன் வரலாற்று மகிமையும் சேர்க்கப் பட்டுள்ளன. இதனைப் படிக்கும் அன்பர்கள் முருகன் திருவருள் பெற்று சகல சௌபாக்கியங்களுடனும் வாழ்வார்கள் என்பதில் ஐயமில்லை.

ஆக்கியோன்.

உ

ஓம் ஸ்ரீ மகா கணபதி துணை

திருச்செந்தூர் தல புராணம்

விநாயகக் கடவுள் வணக்கம்.

எழுத்தும் சொல்லும் பொருளு மிணக்குற
வழுத்துஞ் சீர் செயந்திப்பதி மான்மியம்
விழுத்த குந்தமி ழாற்சொல வேதமே
பழுத்த குஞ்சரன் பாதங்கள் போற்றுவாம்.

யானை முகனும், தொந்திவயிறுடையவனும், ஸகல விக்கினங்களையும் நீக்குபவனும், உமாதேவியின் திருமகனுமாகிய விக்கினேசுவரனை வணங்குகின்றேன்.

சூத முனிவரிடம் முனிவர்கள் கேட்டுக்கொண்டது

ஷட்குண ஸம்பூரணமாகிய 'சௌனக மகரிஷி' அனிமிஷ க்ஷேத்திரத்தில் தன் யாகத்தை ஆரம்பித்தார். யாக மண்டபத்திலே விசுவாமித்திரர், வசிட்டர் முதலான ரிஷிகள் தம் ஆசனங்களில் அமர்ந்திருந்தனர். அப்பொழுது நிர்மல சித்தரும் மகா யோகியுமான சூத முனிவர், முனிவர்களின் முன்னிலையில் கூப்பிய கரங்களுடனும் புன்னகை முகத்துடனும்

வந்தார். அது கண்ட முனிவர்கள் யாவரும் மிகவும் மகிழ்ந்து வரவேற்று, சூத முனியை நோக்கி, "சுவாமி கலி தோஷங்களை நாசம் செய்வதை விநோதமாக்கிக் கொண்டிருக்கும் பரமாத்மாவான சுப்பிரமணியருடைய திவ்விய கதைகளை நாம் அறிய மிகவும் ஆவல் கொண்டுள்ளோம். உலகம் உய்யும் பொருட்டு தாரகா சூரன், பத்மா சூரன் முதலியவர்களை சம்கரித்து "ஜயந்தி" என்னும் "திருச்செந்தூர்" தலத்தில் தன் பக்தர்களுக்கு போக மோட்சங்களை நல்கி இரண்டு தேவிமாருடன் இனிது வீற்றிருந்து யாவருக்கும் இகபர சௌபாக்கியங்களைக் கொடுத்து ஸன்னிதானம் செய்கிறார் என்று முன்பு கேள்விப்பட்டோம். முனிவரே! "ஜயந்தி" அப்பெயர் பெற்ற வரலாறும் கந்தமாதன பர்வதம் கொண்டுவரப்பட்டதும் வல்லி தேவி, தேவசேனை ஆகியோரின் திருமணம் நடந்த வரலாறும் நாங்கள் நன்கு அறிந்து கொள்ளும்படி விரிவாக அக்கதைகளைச் சொல்லியருள வேண்டும்" என்று பணிவுடன் கேட்டுக் கொள்ளவும் சூத முனி சொல்லலுற்றார்.

சுப்பிரமணியர் திரு அவதாரமும், தேவர்களுடன் திருச்செந்தூர் எழுந்தருளிய வரலாறும்

திருக் கயிலாயத்தில் பரமசிவனார் பார்வதி தேவியாருடன் சந்தோஷமாக வீற்றிருக்கும் சமயத்தில் சூரபத்மாதிகளால் மிகவும் கஷ்டப்பட்டு வருந்தும், இந்திரன், பிரம்மா, விஷ்ணு முதலானவர்கள் சிவபெருமான் முன்னிலையில் சென்று, தாழ்ந்து, பணிந்து, வணங்கி நின்று, பிரபுவே! தேவதேவா

சூரபத்மாதி அசுரர்களைக் கொன்று எங்களைக் காப்பாற்றும் பொருட்டு, ஓர் குமாரனைத் தந்தருள் வீராக" என்று பிரார்த்தித்து நின்றார்கள். மகேஸ்வரன் தன் திருவுளமிரங்கிப் பார்வதி தேவியைப் பரிவுடன் நோக்க, அம்பிகையும் இரங்க, அம்பிகையின் திருமுகமும், தனது ஐந்து முகமும் சேர்ந்து ஆறுமுக மாகத் தனது நெற்றிக்கண்ணிலிருந்து ஆறு தீப்பொறிகள் தோன்றின. சிவபெருமான் அத் தீப்பொறிகளை வாயு தேவனையும் அக்கினி தேவனையும் எடுத்துச் சென்று கங்கையில் கொண்டு விடும்படி கட்டளையிட்டார்.

தேவர்களும் அவ்விதம் செய்ய, கங்கையும் தீப்பொறிகளைத் தாங்கிச் சென்று சரவணப் பொய்கையில் விட, ஆங்குத் தீப்பொறிகள் ஆறும் ஆறு திருக் குழந்தைகளாக அவதாரம் செய்து விளையாடிக் கொண்டிருந்தன. இது கண்ட கார்த்திகைப் பெண்கள் ஆறு பேர்களும் அங்கு சென்று ஆறு குழந்தைகளுக்கும் முலை யூட்டினார்கள்.

சிவபெருமானும், உமாதேவியாரும் மற்றும் பிரம்மா, விஷ்ணு, இந்திரன் முதலாய தேவர்களும் சரவணப் பொய்கையில் வந்து குழந்தைகளைப் பார்க்க ஆறு குழந்தைகளும் ஆனந்தமாக சரவணப் பொய்கையில் விளையாடிக் கொண்டிருந்தன. சிவபெருமான் உமாதேவியாரை நோக்கி, குழந்தையை எடுத்து வரும்படி உள்ளக் கனிவோடு கட்டளையிட தேவியும் மன மகிழ்வோடு சரவணப் பொய்கையில் இறங்கி ஆறு திருக் குழந்தைகளையும் தனது கரங்களால் ஒன்று சேர்த்து எடுக்க, ஆறு குழந்தைகளும் ஓர் குழந்தை

யாகி முகம் ஆறும், கை பன்னிரண்டுங் கொண்டு ஆறுமுக மூர்த்தியாகக் காட்சி கொடுக்க உமாதேவி குழந்தையைத் தன் திரு மார்பிலணைக்கத் தனது கொங்கையில் அமுதம் சுரக்க, முலையூட்டி "கந்தா" வென்று பெயரிட்டு மகிழ்ந்து சிவபெருமான் திருக் கரத்தில் கொடுத்தாள்.

சிவபெருமானும் மகிழ்ந்து எடுத்து அணைத்து உச்சி மோந்து, ஆசீர்வதித்து தனது பக்கத்தில் ரிஷபத்தில் அமர்த்த, பார்வதி தேவியார் மறுபுறமிருக்க சுப்பிரமணியர் சோமாஸ்கந்த முகூர்த்தமாக விளங்கினார். பிரம்மாவும், விஷ்ணுவும், இந்திரன் முதலிய தேவர்களும், சப்த ரிஷிகளும், மற்றும் முனிவர்கள் யாவரும் கண்டு மகிழ்ந்து, பூமாரி பொழிந்து வணங்கித் துதித்தார்கள். பிறகு பார்வதிதேவியாரின் பாதச் சிலம்பினின்றும் நவசக்திகள் தோன்றினார்கள். நவசக்திகளின் வயிற்றில் வீரபாகு தேவர் முதலிய இலட்சத்தொன்பது வீரர்கள் முருகப் பெருமானுக்கு உதவியாகவும் படை வீரர்களாகவும் தோன்றினார்கள்.

சிவபெருமான் இந்திரன் முதலிய தேவர்களை நோக்கி, நீங்கள் முருகப் பெருமானை வணங்கி சகல விதமான வரங்களையும் பெறுவீர்கள் என்று திருவாய் மலர்ந்தருளி பார்வதி தேவியாருடன் திருக் கயிலை சென்றார்கள். முருகப் பெருமான் இலட்சத்தொன்பது வீரர்களுடனும் ஸ்கந்தகிரியில் விளையாடி நின்றார். தேவர்கள் இந்திர லோகம் சென்றார்கள். பிறகு கொஞ்ச காலம் சென்று தேவேந்திரன் முதலிய தேவர்கள் திருக்கயிலை சென்று சிவபெருமானிடம் சூரபத்மா

முதலிய அசுரர்களை அழிக்கும் பொருட்டு முருகப் பெருமானை அனுப்ப வேண்டுகிறோம் என மறுபடியும் பிரார்த்தித்தார்கள்.

சிவபெருமான் முருகப் பெருமானை அழைத்து, பார்வதி தேவியரின் சக்தியைச் சக்தி வேலாக அமைத்து முருகப் பெருமானின் வலக்கரத்தில் கொடுத்தார். தனது அம்சமாகிய பதினொரு ருத்திரர்களையும் படைக்கலமாகச் செய்து முருகப் பெருமான் கரத்தில் கொடுத்தார். உயர்ந்த இந்திர ஞாலத்தேரையும் கொடுத்து, 'குழந்தாய்' ஆறுமுகா! நீ சூர பத்மாதி அசுரர்களை அழித்து தேவேந்திரன் முதலிய தேவர்களுக்கு தேவர் உலகத்தைப் பட்டாபிஷேகம் செய்யக் கடவாய்'' என்று அருள் புரிந்தார்.

உடன் முருகப் பெருமான் தனது பிதாவையும் அம்மையாரையும் மும்முறை வணங்கி பிரதட்சிணம் செய்து நமஸ்கரித்து புறப்பட்டு நின்றார். வீரபாகு முதலிய வீரர்களும் பிரம்மாவும், விஷ்ணுவும் இந்திரன் முதலிய தேவர்களும் புடைசூழ முருகப் பெருமான் பூலோகத்தை நோக்கினார்.

பூலோகத்தில் தென் கிழக்கில் வீர மகேந்திர புரிக்குச் சமீபமாக சமுத்திர அலைகள் உயர்ந்த இரத்தினங்களையும் முத்துக்களையும் கொழித்துக் கொண்டிருக்கக் கூடிய அலைவாய்க் கரையாகிய "செந்தில்மா நகரம்'' தோன்றியது.

முருகப் பெருமானும் தேவர்களும் ஆலோசித்து இதுவே நமக்கு சௌகரியமான இடமென்று திருவுளங்

கொண்டு ஆகாய மார்க்கமாகச் செந்தில்மா நகரம் வந்து இறங்கினர்கள். ஆங்கு தேவ தச்சனுகிய விஸ்வகர்மாவை அழைத்து உயர்ந்த புதிதாகிய ஆலயம் அமைத்து இரத்தின மயமாகிய சிம்மாசனத்தில் தேவர்கள் புடை சூழ ஆறுமுகப் பெருமான் வீற்றிருந்து அரசு புரிந்தார்.

தேவேந்திரன் முருகப் பெருமானை வணங்கி "தேவாதிதேவா! எங்களுக்கு ஏற்பட்ட இடையூறுகளை நீக்கித் தரவேண்டும்" எனப் பிரார்த்திக்க ஆறுமுகப் பெருமான் அபயம் செய்து பயப்படவேண்டாம் என்றருளி வீரவாகு தேவரை அழைத்து "வீரவாகுவே, நீ கடலைத் தாண்டி எதிராக இருக்கும் வீரமஹேந்திரம் சென்று, சூரபத்மாவினிடம் நீ சிவபெருமான் கொடுத்த வரப்படி 1008 அண்டத்தையும் 108 சதுர் யுகமாய் பூவுலகையும் ஆண்டாய் விட்டது. அதுவுமின்றி, நீ சயந்தன் முதலிய தேவர்களைக் கொடிய சிறையிலிட்டாய். அத்தேவர்களைச் சிறையினின்றும் நீக்கி, முருகப் பெருமான் திருவடிகளை வணங்கி வாழ்வாயாக! அவ்விதம் தேவர்களைச் சிறையிலிருந்து விடாதிருந்தால் செந்தில் மாநகரத்தில் அமர்ந்திருக்கும் ஆறுமுகப் பெருமான் நேராக வந்து, உன்னையும் உன் சுற்றத்தாரையும் அழித்து இந்த மகேந்திர புரியையும் அழிப்பார். இது உறுதி என்று தூது கூறி அவன் பதிலையும் தெரிந்து வா" என்று விடை கொடுத்தனுப்பினர்.

வீரவாகு தேவரும் முருகப் பெருமானை மும்முறை வணங்கித் தொழுது, நமஸ்கரித்து அவரது அருளைப் பெற்றுக் கொண்டு, மாலைப் பொழுதில்

செந்தில் மாநகரத்திலிருந்து கிழக்கு நோக்கி கடலைத் தாண்டி வீரமஹேந்திரம் சென்றார்.

இவ்விதமிருக்க வீரமஹேந்திரபுரியில் சூர பத்மாவால் வெகு காலத்திற்கு முன்பு, அதாவது முருகப் பெருமான் அவதாரத்திற்கு முன்னலேயே சிறையிடப் பட்ட இந்திர குமாரனுகிய சயந்தனும் தேவர்களும் பல காலமாக, அதனுல் துன்புறுத்தப்பட்டு மெலிந்து அங்கம் வாடி மனம் நொந்து, ஒவ்வொரு நாளும் சிவ பெருமானை நினைந்து உருகி அழுது 'சிவபெருமானே! நீவிர் எங்களுடைய துன்பத்தை நீக்கி அருளவேண்டு மென்று பிரார்த்தித்துக்கொண்டிருந்தார்கள். வீரபாகு தேவர் தூது வருகின்ற அன்றும் அத்தேவர்கள் மிகவும் மனம் நொந்து சிவபெருமானை நினைக்க, செந்தில்மா நகரத்தில் வீற்றிருக்கும் முருகப் பெருமான் சயந்தன் முதலிய தேவர்களுக்கு அருளத் திருவுளங் கொண்டு அவர்களுடைய கனவிலே தோன்றினர்.

செந்தில் வாழ் ஆறுமுகப் பெருமான் நடுநிசி தன்னில் வீரமஹேந்திரபுரிச் சிறைச்சாலையில், மூர்ச்சையற்றுக் கிடக்கும் சயந்தன் முதலிய தேவர்களுடைய சொப்பனத்தில் புன் சிரிப்புக் கொண்ட ஆறுமுகம், பன்னிருகைகளின் அபய வரதத்துடனும், மாறுபாடற்ற திவ்விய பிரகாச வடிவேலுடனும் தோன்றினர்.

அது கண்ட சயந்தனும் தேவர்களும் அத்திவ்ய வடிவத்தைக் கண்டு, "சுவாமி! நீர் எங்களைக் காக்க வந்த அருள் மூர்த்தியாகத் தோன்றுகின்றீர். ஆயினும் எங்களுக்கு ஒரு சந்தேகம் என்னவென்றல் சிவபெருமானுக்கு ஐந்து முகம் உண்டு. உமக்கு ஆறுமுகம்

இருக்கின்றது. ஆதலால் நீர் அச் சிவபெருமானு மில்லை, விஷ்ணுமில்லை, பிரமனுமில்லை. ஆதலால் தாங்கள் யாரென்பதை எங்களால் அறியக்கூடவில்லை. சூரனே மாயாவியாகி இந்த ரூபம் எடுத்து வந்தானே அறியோம்'' என்று பயத்துடன் பணிந்து கேட்க, முருகப் பெருமான் புன்னகையுடன், ''சயந்தா! அஞ்சேல்! அஞ்சேல்! யாம் அக் கொன்றைமாலையைத் தலையில் அணிந்த சிவபெருமானின் நெற்றிக் கண்ணில் உதித்த பரஞ்சுடர்க் குமரன், உன் தந்தையாகிய இந்திரன் வேண்டலால் நாம் அளிவில்லாத சேனை களோடும் உயர்ந்த இந்திரஞாலம் என்னும் தேரில் ஏறிக்கொண்டு ஜயந்திமா நகரம் எனப்படும் திருச்செந் தூரில் வந்து அமர்ந்திருக்கின்றோம். உன் தந்தை யாகிய இந்திரன் முதலிய தேவர்கள், பிரமா, விஷ்ணு முதலிய யாவரும் என் பக்கத்தில் இருக்கிறார்கள். என் தம்பியாகிய வீரபாகுவை இவ்விடம் தூதாக அனுப்பி இருக்கின்றோம். தூதுகேட்டு வந்த பிறகு நாம் இவ் விடம் வந்து, சூரபத்மாதி அசுரர்களை அழித்து, உங்க ளையும் சிறையிலிருந்து விடுதலை செய்து எம்மோடு அழைப்போம்'' என்று திருவாய் மலர்ந்தருளி செந்தில் மாநகர் ஏகினர்.

சயந்தனும் தேவர்களும் மூர்ச்சை தெளிந்து எழுந்து, சந்தோஷம் மிகுந்து, கண்களில் ஆனந்த வெள்ளம் பொழியப் பன்முறை முருகப் பெருமானை வணங்கி அமிர்தம் உண்டவர்கள் போல ஆனந்தமாக அச்சமின்றி வாழ்ந்து வந்தார்கள்.

வீரமஹேந்திரபுரிக்குத் தூதாக அனுப்பப்பெற்ற வீரபாகு தேவரும் அங்கு சென்று சிறைச்சாலையில் சயந்தன் முதலிய தேவர்களைப் பார்த்து விஷயத்தைச் சொல்லிச் சூரபத்மாவினுடைய சபையில் ஏகினர்.

அது சமயம் வீரபாகு தேவர் செந்தில் முருகப் பெருமானைத் திருவுளத்தில் நினைக்க பொன் மயமான சிம்மாசனம் ஒன்று சூரபத்மாவின் சபையில் வந்து இறங்கியது. அதில் வீரபாகு தேவர் கம்பீரமாக அமர்ந்து சூரபத்மாவினிடம் முருகவேள் திருவாய் மலர்ந்தருளிய வார்த்தைகளை யுரைத்தார்.

அப்பொழுது சூரபதுமன் எள்ளி நகையாடி மறுத்துப் பேசி, "நான் தேவர்களை சிறை விடுதலை செய்ய மாட்டேன்" என அகங்காரத்துடன் கூறியதால் வீரபாகுதேவர் அவ்விடமிருந்து ஆகாய மார்க்கமாகக் கடலைத் தாண்டிச் செந்தில்மா நகரம் வந்து, முருகப் பெருமானின் திருவடிகளில் வணங்கி சூரபத்மா கூறிய பதிலையும் கூறினர்.

முருகப் பெருமான் மறுநாள் காலையில் எழுந்து நித்ய கடமைகளை முடித்துக்கொண்டு, தேவாதிதேவர் களிடமும், விஷ்ணு, பிரமா, பிரகஸ்பதி முதலியோரிட மும் யுத்தத்திற்குப் புறப்படும்படி கட்டளையிட்டார்.

முருகப் பெருமான் எல்லாத் தேவர்களையும் இலட்சத்தொன்பது வீரர்களையும் ஆசீர்வதித்து, ஜெய பேரிகை முழங்க இந்திரஞாலத் தேரில் ஏறிக்கொண டார். வாயுதேவன் ரதம் ஓட்ட ஆகாய மார்க்கமாக யாவரும் வீரமஹேந்திரம் சென்றார்கள்.

வீரமஹேந்திரபுரியில் சூரபத்மா முதலிய அசுரர்களும் முருகப் பெருமானின் வரவை அறிந்து அசுரர்களின் சபையைக் கூட்டி யுத்தத்திற்குப் புறப்படும்படி கட்டளையிட்டார்கள். பத்து தினங்களாக நடந்த இந்தப் போரில் முருகப்பெருமான் எல்லா அசுரர்களையும் அழித்து சூரபத்மாவை மட்டும் தனித்து நிறுத்தி போர் புரிந்தார். அப்பொழுது முருகப் பெருமான் காண்பதற்கு அருமையான தனது விஸ்வ ரூபத்தைச் சூரபத்மாவிற்கு காட்டியருள, அவன் மகிழ்ந்து, "முருகப் பெருமானே! உம்முடைய திவ்விய திருவடிகளில் வணங்கிய என்னை ஆட்கொள்ள வேண்டுமெனப் பிரார்த்தித்து நின்றான்.

முருகப் பெருமானும் தனது திவ்விய வேலாயுதத்தை ஏவ, அதன் மகிமையால் சூரனது ரூபம் அழிந்து அவன் சேவலும் மயிலும் ஆனான். அதாவது சூரபத்மாவின் ஆணவம் மயிலாகவும் ஞானம் சேவலாகவும் மாறியது. இரதத்தில் சேவல் கூகா! கூகா! கூகா! என்று முருகப் பெருமானின் புகழைக் கூவி நின்றது. மயில், வாகனமாக அமைந்தது. தேவர்கள் பூமாரி பொழிந்தார்கள். சயந்தன் முதலிய தேவர்கள் சிறையினின்றும் நீங்கி வந்தார்கள். மஹேந்திரபுரி அழிந்தது. முருகப் பெருமான் தேவர்களுடன் மயில் மீதினில், சேவல் கொடியுடன் ஜெயபேரிகை முழங்க செந்தில் மாநகர் வந்தமர்ந்தார். முருகப் பெருமான் தேவர்கள் முன்னிலையில் தேவேந்திரனுக்குத் தேவருலகைப் பட்டாபிஷேசம் செய்வித்தார்.

தேவர் குருவாகிய பிரகஸ்பதி பகவானும் இந்திரன், பிரமா, விஷ்ணு முதலியோரும் சுவாமி சுப்பிர

மணியரை தினம் ஒன்பது காலம் பூஜை செய்தார்கள். சுவாமி சுப்பிரமணியர் பிதாவாகிய பரமேஸ்வரனை இலிங்க பூர்வமாக இடைவிடாது பூஜை செய்தார். முருகப் பெருமானும் தேவர்களும் இந்தத் தலத்தில் தங்கி ஜெயம் பெற்றதினலே ஜெயந்திமா நகரம் என்னும் பெயரைச் செந்திலுக்கு வழங்கினர்கள்.

தெய்வானை அம்மையார் திருக்கல்யாணம்

பின்னர் கொஞ்ச காலம் செல்ல தேவேந்திரனும், இந்திராணியும், பிரகஸ்பதி பகவானும் பணிந்து வேண்டிப் பிரார்த்தித்துக் கொண்டதற் கிணங்க முருகப்பெருமான் எல்லோருடனும் திருப்பரங்குன்றம் சென்று, அவ்விடத்தில் விஸ்வகர்மாவால் செய்யப் பட்ட மணப்பந்தலில், சிவபெருமானும் பார்வதி தேவியாரும், கணபதியும், மற்றும் சகல தேவர்களும் வீற்றிருக்க, பிரம்ம தேவர் அக்கினி வளர்த்துத் தெய்வானை அம்மையாரை வேத விதிப்படி இந்திரனும் இந்திராணியும் தாரை வார்த்துக் கொடுக்க திருமணம் புரிந்து கொண்டார். தேவர்கள் பூமாரி பொழிந்தனர்.

பின்னரும் முருகப் பெருமான் தெய்வானை அம்மையாருடனும் இந்திராதி தேவர்களுடனும் வீரபாகு மூர்த்தி முதலிய பூதகணத் தலைவர்களுடனும் செந்தில் மாநகரம் வந்து, ஆனந்தமாக அமர்ந்து அருள் பாலித்து, இந்த சன்னிதியில் பக்தகோடிகள் எந்த மனேசுபீஷ்டத்துடன் வந்து சேவை செய்கிருர்களோ அவரவர்களுக்கு அவர்கள் மனே சுபீஷ்டத்தையும் கொடுத்துக் கொண்டும் சகல விதமான சௌபாக்கியங்களையும் அருளிக் கொண்டும், கல்யாண முகூர்த்தமாக அமர்ந்திருக்கிருர்.

ஹேமமுனி சாபத்தால் கந்தவர்கள் வேடரானதும், வல்லியவதாரமும், சாபவிமோசனமும்.

முன் ஒரு காலத்தில் ஹேமனென்ற ஒரு முனிவரானவர் மகாமேருபர்வதத்திலமர்ந்து நாராயணனைக் குறித்துத் தவம் செய்து வருங்கால், தேவர்கள் அவரின் தவத்தைக் கெடுக்க எண்ணி கோவைப் பழம் போன்ற அதரத்தையுடைய அப்ஸரஸ் ஸ்திரிகளை அவரிடம் அனுப்பினர்கள். அவர்கள் முனிவரின் முன் தோன்றி ஆடல் பாடல் நிகழ்த்தினர்கள். இதனல் முனிவரின் ஸமாதிநிலை குலைந்தது. அவர் கோபத்தால் வெகுண்டு எழுந்து, 'ஓ பாவிகளே! என் தவத்திற்கு இடையூருக நீங்கள் இருந்ததால் ஆண்கள் வேடுவர்களாகவும், பெண்கள் வேட்டுவ ஸ்திரிகளாகவும் ஆகக்கடவீர்களெனச் சபித்தார்.

சபிக்கப்பட்ட தேவர்கள் திடுக்கிட்டு நிலைகுலைந்து முனிவரை வணங்கிச் சரணடைந்து, அவரை நோக்கி, "சரணடைந்தோரைக் காப்பவரே! நாங்கள் மதியீனத்தால் பிழை செய்து விட்டோம். எங்கள் குற்றத்தை மன்னித்து எங்களுக்குச் சாப விமோசனம் அருளல் வேண்டும்" எனக் கூறிப் பணிந்து நின்றனர்.

அதுகண்ட முனிவர் அவர்களது நிலை கண்டிரங்கி, "ஓ தேவர்களே! நான் கூறுவதைக் கவனித்துக் கேளுங்கள். முன் கிருதாயுகத்திலே பரமசிவத்தின் குமாரராகிய சுப்பிரமண்யர் சூரபதுமன் முதலான ஸகல துஷ்டர்களையும் வதஞ்செய்து, விஷ்ணுவின் கண்களிலிருந்து உண்டான வல்லி, தேவஸேனை என்ற

மாதர்களை முனிவர்களின் முன்பாக விதிப்படி மணந்து திருச்செந்தூரில் அருள் புரிந்துவரும் காலையில், முதல் மனைவியாகிய வல்லி, 'நானே சிறந்தவள், தேவசேனை எனக்கு நிகராகாள்' என இறுமாப்புக்கொண்டு இரவும் பகலும் தன் சக்களத்தியாகிய தேவசேனையை நிந்தித்து வந்தாள். தேவசேனையோ வல்லியம்மை தனக்குச் செய்யும் அவமானம் முதலியவைகளைப் பொறுத்துத் தன் கணவருக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்து பொறுமையுடனிருந்து வந்தாள். உலக ரக்ஷகனாகிய சுப்பிரமணியர் இவை அனைத்தையும் ஞான திருஷ்டியால் அறிந்து வல்லியை அழைத்து, "வல்லி தேவி! நான் சொல்வதைக்கேள்! எனது இரண்டாம் மனைவியை நீ அவமதித்தனை. இதனால் நீ கொடிய பாதகியாயினை, அப்பாவத்தின் பலனை நீ அனுபவித்தாலன்றி, அஃது உன்னை விட்டகலாது ஆகவே நீ திர்யக் ஜாதியில் பிறக்கக்கடவை. பிறகு நீ வேடுவர்களால் வளர்க்கப் பட்டு வரும்பொழுது, நான் முனிவர்களுடன் வந்து முறைப்படி உன்னை மணந்து கொள்வேன்" எனக் கூறினார்.

வல்லி தேவியானவள் மிகவும் வருந்தி இருக்குங் கால், ஆறுமுகனின் திருவாக்குப்படி காஞ்சனை என்ற ஒரு ஸ்திரியிடம் பிறக்கப் போவதாகத் தெரிந்தது. காஞ்சனை ஒரு அப்ஸரஸ் கன்னிகையாவாள். அவள் மான்வடிவத்தோடு பூதலத்தில் தவம் செய்துவருகிறாள். ஆகவே "ஓ தேவர்களே! நீங்கள் அக்குழந்தையை எடுத் துக் காப்பாற்றி வாருங்கள். அவள் பருவமடையும் சமயத்து கருணைக் கடலாகிய முருகன் வந்து அக் கன்னியை மணந்து கொள்வார். அவரது அருளால் நீங்களும் சாபம் நீங்கப்பெற்று ஸ்வர்க்கத்தில் சுகமாக

வாழக்கடவீர்கள்" என்று கூறவும், தேவர்கள் வேடுவர்களாகிப் பூமியில் விந்திய வனத்திலே காய் கிழங்குகளைத் தின்று ஜீவித்து வரலானார்கள்.

இவ்வாறு இருக்குங்கால் ஒருநாள் காஞ்சனை என்ற மானும் பூர்ண கர்ப்பமாகி, மெள்ள மெள்ள வேடுவர் குடிசையை அடைந்து தனது பிரசவ வேதனையைத் தெரிவித்தது.

வேடர்களும் மனமகிழ்ச்சி கொண்டு அதனை ரக்ஷித்தனர். பின்னர் காஞ்சனையும் நல்லதொரு நக்ஷத்திரத்தில் சுப முகூர்த்தத்திலே, ஒரு அழகிய அதிசயிக்கத்தக்க ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுத்து, பின்னர் காஞ்சனை தேவப் பெண்ணாகி யாவரும் காணக் கைலாயம் அடைந்தாள்.

பின்னர், வேடுவர்கள் அக் குழந்தையைத் தங்களரசனிடம் கொண்டு செல்ல அரசன் அக் குழவியைக் கண்டு மகிழ்ந்தான். வேடர்கள் கருநெய்தல் பூவைப்போன்ற நீண்ட கண்களையும், சண்பகப்பூவைப் பழிக்கும் மூக்கையும், பவழம்போன்ற உதடுகளையும் முத்துப் பற்களையும், தாமரைபோன்ற முகத்தையும் தங்க நிற மேனியையும் உடைய இக் குழந்தையால் நம் பாவம் விலகுமெனச் சந்தோஷத்துடன் பேசிக் கொண்டனர்.

வேடராஜனும் அக்குழந்தையைத் தன் புத்திரியாக அபிமானித்து, இவளை அநேக கோடி பிரம்மாண்டங்களுக்கு இறைவனே பாணிக்கிரகம் செய்யத் தகுதியுள்ளவன் என தீர்மானித்துத் தன் மனைவியிடம் கொடுத்து வளர்த்து வந்தான்.

தேவனது கட்டளையால் வேடனும் அக்குழவியை, வல்லி என்று பெயரிட்டு அவளழகைக்கண்டு மகிழ்ந்து கொண்டிருந்தான்.

திருப்புவனத்தில் வள்ளியிடம் சண்முகமூர்த்தி சென்று, அவள் கருத்தறிந்து வேடராஜனிடம் சென்றது

தோழிமாருடன் வள்ளியானவள் ஜயந்தி க்ஷேத்திரத்திற்குச் செல்லுங்கால், அதற்குச் சமீபத்திலிருக்கும் தினைக் காட்டில் ஊர்க்குருவிகள் கூச்சலிடுவதைக் கண்டு அவ் வனத்தில் புகுந்தாள். அவ் வனத்தின் அழகிலே மனமகிழ்ந்த வள்ளி, தினந்தோறும் அவ் வனத்திற்குத் தன் தோழிமாருடன் சென்றுவரலானாள். இவ்வாறு இருக்குங்கால், ஒருநாள் பார்வதியின் திருக்குமாரராகிய சுப்பிரமணியர் இளைப்பாறவேண்டி மயில் வாகனத்தின் மீதேறி ஆகாயத்தில் சஞ்சரித்து வரும் பொழுது வள்ளியைக் கண்டு மோகித்து மாரன் கணையால் கட்டப்பட்டுப் பிராமண வேடம் பூண்டு அவளுடன் இனிய வார்த்தைகளையாடினார். "பெண் மணியே, நீ யாருடைய புத்திரி? உன் ஊர் எது? உன் வீடு எங்கே? உன்னைப் பார்த்தவுடனே என் மனம் கலங்கி மதனுக்குள்ளாயிற்று. நீ இன்னும் விவாகமாகாத கன்னிகையாய் இருப்பின் உன்மேல் பேராசை கொண்டுள்ள என்னை மணந்துகொள்!" என்று கூறவும், வள்ளி "ஈசா! என் பெற்றோர் இழிந்த வேடுவ குலத்தில் உதிர்ந்தவர்கள்; என் வீடு ஒரு கல் தொலைவிலேயுள்ளது. நான் இன்னும் கன்னியே" என்றாள். செந்திலாதிபன் அவளை நோக்கி, "பெண்ணே!

நீ எனக்கு மனைவியாக வேண்டு" மெனக் கூற, வள்ளி அவரை நோக்கி, "கன்னியர்கள் தாய் தந்தையரின் அனுமதியின்றித் தானே கணவர்களை நாடுவார்களாயின் உலகம் அவர்களைப் பழிக்கும். ஆகவே தாங்கள் அவர்களைக் கண்டு கேட்டீர்களானால் அளவற்ற சந்தோஷத்துடன் என்னைத் தங்களுக்குக் கொடுப்பார்கள்" என்று புகல குகனும் மனமகிழ்ந்து வள்ளியின் பிதாவாகிய நம்பிராஜனிடம் சென்றார்.

கணபதியின் ஸகாயத்தால் சுப்பிரமணியர் வள்ளியை மணம் புரிதல்

முருகக் கடவுள் அந்தண வடிவுடனேயே வள்ளியின் பிதா இருக்குமிடம் சென்று, அவரை நோக்கி, "தாங்கள் புத்திரியாகிய வள்ளியை எனக்கு மனையாளாகக் கொடுக்க வேண்டு" மெனக் கேட்க, அந்த வேஷதாரியாகிய அந்தணனை சுப்பிரமணியர் என்பதை அறியாத வேடர் தலைவன் பிராமணனை நோக்கி, "ஓ அந்தணனே! என் புத்திரியாகிய வள்ளியை மயில் வாஹனனாகிய சுப்பிரமணியருக்கேயன்றி வேறு எவருக்கும் கொடுப்பதில்லை" என்றார். இது கேட்டு மயிலேறும் பெருமாள் மகிழ்ந்து கொஞ்சம் திருவிளையாடல் புரியும் நினைப்புடையவராக அவ்வேடன் மனைவிட்டகன்றார்.

பின்னர், குகன் வள்ளி இருக்கும் தினைப்புனம் சென்று வேண்டியதெல்லாம் தருவதான ஒரு கற்பக விருக்ஷமாக நின்றார். புதிதாகத் தோன்றிய அம்மரத்தை வள்ளியும் அவள் தோழியரும் கண்டு மகிழ்ந்து அம் மரத்தினடியில் படுத்தார்கள். அம் மரத்தின்

மகிமையால் வள்ளி தன்னை மறந்த நிலையிலே எல்லாம் மறந்து ஆழ்ந்த நித்திரையிலாழ்ந்தாள்.

வள்ளி வெகு நேரமாக வராதது கண்ட வேடன் கலங்கிய மனத்தினனாய் வனத்திற்கேக, அங்கே புதிய மரத்தையும், அதனடியில் நித்திரை செய்யும் வள்ளியையும் கண்டான். 'இங்கே ஏது புதிய மரம்' என்ன ஆச்சரியம். இது ஒரு இந்திரஜாலமாகத்தான் இருக்க வேண்டும். ஆகவே இதை இப்பொழுதே வெட்டிவிட வேண்டும் என எண்ணிய வேடன் கோடாரியைத் தன் கையிலே எடுத்தான். அந்த விநாடியே அக் கற்பக மரம் காணாது திடீரென மறைந்து போயிற்று. இது ஓர் வஞ்சகத் தோற்றம் என எண்ணிய வேடன் கன்னிகையை அழைத்துக்கொண்டு தன் அரண்மனை சேர்ந்தான்.

இஃது இவ்வாறிருக்க, கந்தன் வள்ளிபால் கொண்டுள்ள விரகதாபத்தால் மிக வருந்தி, தன் தமையனை யானைமுகக் கடவுளாகிய விநாயகனை வணங்கி அவரை நோக்கி, "ஓ அண்ணா! எனக்குச் சுகத்தைத் தருவதற்கு உரியவளாகிய வள்ளி என்ற ஒரு கன்னிகை ஓர் வேடன் வசத்திலிருக்கிறாள். அவளை நானடையத் தாங்கள் உதவவேண்டும். வள்ளி இப்பொழுது சமீபத்திலுள்ளதொரு தினை புனத்திலே வசிக்கிறாள். அவ்வனத்தில் தேவரீர் ஓர் யானை வடிவுடன் சென்று அவளைப் பயப்படுத்தவேண்டும். அச்சமயம் அங்குத் தோன்றும் என்னிடம் பயத்தால் அவள் ஓடி வரவேண்டும். பின்னர் யான் அவளை விதிப்படி மணம் புரிதல் வேண்டும்" என்றார்.

முருகனின் வேண்டுகோள்படியே விநாயகர் நடந்து கொள்ள வள்ளி பயமடைந்தவளாய் முருகனை அணைத்து கொள்ள, முருக வேளும் கன்னிகா ரத்னமாகிய வள்ளியுடன் மெய்மறந்து நின்றார்.

தினைப்புனத்திலே நடந்த சமாச்சாரம் முழுவதையும் அறிந்த வேடுவ மன்னன் மகிழ்ந்து தினைப்புனம் அடைந்தான். வேடுவர்களுக்குச் சந்தோஷம் உண்டாகும்படியும் அவர்கள் சந்தேகம் நீங்கும் படியாகவும் சண்முகனும் ஆறு முகங்களோடும் மயில் வாகனனாய், தேவர்கள், அசுரர்கள், கந்தருவர்கள், சூரியர்கள் உருத்திரர்கள், அப்ஸரஸ்கள் முதலியவர்களால் சேவிக்கப் பட்டு மகாதேஜஸுடன் தோன்றினர். வேடுவ மன்னன் இக்காட்சி கண்டு மனமகிழ்ந்து யாவரையும் தன் இல்லம் அழைத்துச்சென்று வேத விதிப்படி வள்ளி நாயகியைச் சுப்பிரமணியருக்குக் கன்னிகா தானம் செய்து கொடுத்தான். தேவர்கள் பூமாரி பொழிந்தனர். அப்ஸரஸ்கள் நடனமாடினர். கந்தருவர்கள் கானம் இசைத்தனர். வேடுவர்களும் ஹேம முனிவனின் சாபத்திலிருந்து விடுபட்டு அமரலோகத்தை யடைந்தனர். சுப்பிரமணியரும் வள்ளி நாயகியுடன் ஸிந்து க்ஷேத்திரத்திற்குப் புறப்பட்டார்.

இஃது இவ்வாறாகத் தேவசேனை பரமசிவனை நோக்கித் தவம் புரிய அவரும் தோன்ற, அவள் அவரை வணங்கி சுவாமி! "தேவரீர் குமாரரான குமரேசனுக்கும், அவருக்குத் தொண்டு செய்யும் அடியார்களுக்கும், உமது மருமக்களாகிய எங்களுக்கும் வேண்டியவைகளை அளித்து அருள வேண்டு"மெனக் கேட்டுக் கொண்டாள். பரமசிவமும் அவ்வாறே அனுக்கிரகித்து மறைந்தார்.

ஸ்கந்த புஷ்கரணி வரலாறும்

ஆதி ஸேது என்னும் வதனுரபம்

தீர்த்தமும்

சுப்பிரமணியப் பிரபு தன்னை அஞ்சலி செய்து நிற்கும் த்ரிஸ்வதந்திர முனிவர்களை நோக்கி ''ஓ முனிவர்களே! நீங்கள் எப்பொழுதும் இந்த ஸிந்து ஸ்தலத்திலே எனக்குப் பிரியம் செய்துகொண்டு வசியுங்கள். இவ்வாறு நீங்கள் இருப்பதால் உங்களைப் பார்த்த மாத்திரத்தில் ஜந்துக்கள் மோட்சத்தை அடையும். நான் உங்களுள் ஒருவனுக இருந்து உங்களால் சேவிக்கப்படுவேன். மகா பாவங்கள் செய்தவனும் இந்த ஸ்தலத்திலே வாசம செய்தால் அவன் செய்த பாவங்கள் அகன்று முக்தியை அடைவான்'' என்று கூறினர். குகனின் திருவாக்கைக் கேட்ட த்ரிஸ்வதந்திரர்கள் மகிழ்ந்து வணங்கி அவரை நோக்கி, தேவரீரோடு வசிக்கும் பாக்கியத்தை நாங்கள் பெற்றுள்ளோம் ஆனல் ஈண்டு ஓரிடத்தும் ஜலம் காணப்படவில்லை. ஆகவே அமிர்தத்திற்கொப்பாயும் ஸ்நானபானங்கள் செய்வதினல் மனுஷ்யர்களுடைய தரித்திரம், வியாதி இவைகளை யகற்றும் தன்மையுள்ளதும், தத்துவ ஞானத்தைப் புகட்டுவதும், புத்திரன் பௌத்திரன் என்னும் வம்ச பரம்பரையைக் கொடுப்பதும், மனதின் துக்கங்களை விலக்குவது மாத்திரமின்றி ஒரு தடவை அந்த தீர்த்தத்தில் ஸ்நானம் செய்ய தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்னும் நான்கு புருஷார்த்தங்களைத் தரக் கூடியதுமாகிய, திவ்ய ஜலத்தை இவ்விடத்தில் நியமிக்கவேண்டு''மெனப் பிரார்த்தித்தனர்.

பக்தர்களின் வேண்டுகோட்படியே ஆறுமுகனும் ஸக்தி என்னும் ஆயுதத்தைக் கையிலேந்தி, பூமியில் எறிய, அந்த வேல் இருபது வில் போகும் தூரத்தில் தென் திசையில் சென்று பூமியை குழித்துவிட்டுத் திரும்பி முருகனின் கரம் வந்தடைந்தது, உடனே கங்கை பிரவாகத்துடன் வேல் குழிந்த இடத்தில் பெருக, முருகக்கடவுள் த்ரிஸ்வதந்திரர்கள் பார்த்துக் கொண்டிருக்குபொழுது அதில் ஸ்நானம் செய்தார். இவ்வாறு ஸ்கந்தப் பெருமானல் உண்டாக்கப்பட்ட தீர்த்தம் ஸ்கந்தபுஷ்கரணி என வழங்கப்படலாயிற்று. த்ரிஸ்வதந்திரர்கள் அதில் விதிப்படி நீராடி மகிழ்ந் தார்கள்.

பின்னர் ஜகத் குருவாகிய சண்முகன் அவர்களை நோக்கி, "ஓ த்ரிஸ்வதந்திர முனிவர்களே! கேளுங்கள். புகழ்பெற்ற கங்கை, ஸிந்து, காவேரி இந்நதிகளின் ஸங்கமத்திலும்; துவாரகை, கோகர்ணம், ராமசேது, பத்மநாப க்ஷேத்திரத்தில் சங்க தீர்த்தம், கந்தமாதன பர்வதத்திறல் வதனரம்ப தீர்த்தம், நவக்கிரக தீர்த்தம், புருஷோத்தம தீர்த்தம் இவைகளில் எப்பொழுதும் ஸ்நானத்திற்கு விதியிருப்பதால் நீங்களும் மற்றவர் களனைவரும் இந்த வதனரம்பதீர்த்தத்தில் சதா ஸ்நா னம் செய்யுங்கள். இன்னும் ஒரு ரகஸ்யம் கூறுகிறேன்:- முன்னொரு கல்பத்தில் இந்த ஸிந்துவில் ரகுவம்ச சிகாமணியாகிய ஸ்ரீ ராமன் சீதையைத் திருடிக்கொண்டு போன இராவணனை வதைக்க எல்லா பாவங்களையும் தொலைக்கும் ஸேதுபந்தனம் செய்தார். இவ்வாறு மூன்று தடவை கல்பங்கள் தோறும் ஸேதுபந்தனம் செய்தார். இந்த சமுத்திரமானது எல்லா காலங் களிலும் ஸ்நானம் செய்யத் தகுந்தது. மேலும் ஒரு

ரகஸ்யம் கூறுகின்றேன் கேளுங்கள்:- முன் காலத்தில் கந்தமாதன பர்வதம் பர்வதராஜனுகிய மேருவுடன் கலகம் தொடர்ந்து தனக்கு மேன்மை கிடைக்க வேண்டுமென்று நம்மை உத்தேசித்துத் தவம் புரிய நாமுமிரங்கி, நீ வரும் பிரம்ம கல்பத்தில் நமக்கு வசிக்குமிடமாகக் கடவை. அப்பொழுது எல்லோரும் உன்னை மகாமேருவாகக் கொண்டாடுவார்கள். அது வரை நம்மை நீ தியானிக்கவேண்டுமென உறுதி கொடுத்தோம். அவ்விடத்திலே நாம் இன்று வாசம் செய்து வருகின்ரும்.

இன்னும் ஒரு ரகஸ்யம் சொல்லுகிறேன்:- "முன் ஞெருகால் பிரம்மா இறுமாப்புற்றிருந்ததை அறிந்த காஸிந்தனுகிய பரமசிவன் பிரம்மாவினுடைய ஐந்தாவது தலையைக் கிள்ளி எறிந்து, அவரது கர்வத்தை அடக்கினர். உடன் பிரம்மாவானவர் என்னைக் குறித்துத் தவம் செய்ய, யானும் அவரிஷ்டத்தைக் கொடுக்க அங்கு ஸான்னித்யம் செய்து வேண்டியவற்றைத் தருவதாக வரமளித்தேன். அவர் என்னை நோக்கித் துதித்த பிரகாரம் அந்தத் துதியை யார் ஒருவர் நமது ஸன்னிதியில் படிக்கிருர்களோ அவர்கள் சகல சௌபாக்கியங்களையும் பெறுவார்கள். பிரம்மன் பலவாறு வணங்கி பரமசிவனுல் கிள்ளி எறியப்பட்ட தனது ஐந்தாவது தலை வேண்டுமென நமஸ்கரித்தார். என் வேண்டுகோட்படியே பிரம்மன் பரமசிவனை ஆதரிக்க, கேட்டதைக் கொடுக்கும் ஸம்புவும் ஸான்னித்தியம் செய்து பிரம்மனை நோக்கி, "உமக்கு என்ன வரம் வேண்டும்? நான் தருகிறேன்" என்று கூற, பிரம்மன் சிவனை பலவாறு துதித்து ஐந்தாவது முகம் கிடைக்க வரமருள வேண்டி நின்ருர். அப்பொழுது பரமசிவன், "ஜயந்தி

க்ஷேத்திரத்திலே சுப்பிரமணியர் ஸன்னதியிலிருக்கும் சமுத்திரத்தில் ஐந்து நாள் ஸ்நானம் செய்யும். அப்பொழுது ஐந்தாவது முகம் கிடைக்கும்'' என்றருளினர்.

மற்றும் அதிசயிக்கத்தக்க ஒரு தீர்த்த மகான்மியம் இருப்பதையும் கூறுகின்றேன். "முன்னல் கலிங்க ராஜனின் பெண்ணுன கனகசுந்தரி என்பவள் புத்தியீனத்தால் அகஸ்தியர் ஆஸ்ரமத்தில் ஹயக்ரீவ மூர்த்தியை அவமதிக்க, அவர் கோபம்கொண்டு, "பெண்ணே! நீ மறு பிறவியில் குதிரை முகத்துடன் பிறக்கக் கடவை'' என்று சபித்தார். அவள் உடன், தான் அறியாமல் செய்ததை மன்னிக்கவேண்டுமெனப் பிரார்த்திக்க, அவரும் இரங்கி "பிரம்மாவிற்கு முகம் கொடுத்த புண்ணிய தீர்த்தமாகிய வதனரம்ப தீர்த்தத்தில் நீ எப்பொழுது ஸ்நானம் செய்வாயோ அப்பொழுது உனக்கு ஸாபமகலும்'' என்று திருவாக்களித்தார். பிறகு அப்பெண் உக்கிரபாண்டிய ராஜனுக்குக் குதிரை முகத்துடன் பிறக்க, இதுகண்ட மன்னனும் மக்களும் அதிசயத்துடன் மனக் கலக்கமும் அடைந்தனர். அப்பொழுது ஆகாயத்திலே "கங்கை முதலிய எல்லா தீர்த்தங்களிலும் இந்த பெண் ஸ்நானம் செய்தால் இதற்கேதுவான பாவம் நீங்கும், ஸுமதியாவாள்'' என்ற சப்தத்தைக் கேட்டு யாவரும் மனமகிழ்ந்து சந்தோஷமுடன் வளர்த்துவர, அப்பெண் விவாக வயதடையும் பொழுது தீர்த்த யாத்திரை செய்துவர மந்திரி பரிவாரங்களுடன் அனுப்பினன். அப்பெண்ணும் சகல தீர்த்தங்களிலும் நீராடி இறுதியில் திருச்செந்தூரையடைந்து வதனரம்ப தீர்த்தத்தில் ஸங்கற்பத்துடன் ஸ்நானம் செய்யக் குதிரை முகம் நீங்கி ஸர்வாங்க சுந்தரியாக

விளங்கினாள். இச்செய்தி அறிந்த உக்கிரபாண்டியன் மகிழ்ந்து என் சன்னிதியில் வந்து தன் பெண்ணுடன் என்னை வணங்கிச்சென்றான். இப்படிப்பட்ட தீர்த்தத்தில் த்ரிஸ்வதந்திரர்களே! நீங்கள் நித்தியமும் ஸ்நானம் செய்து உங்கள் இஷ்டத்தைப் பெறுவீர்கள்" என்று முருகன் திருவாய் மலர்ந்தருள த்ரிஸ்வதந்திர முனிவர்களும் சர்வ வல்லமையும் கொண்ட அந்த ஸிந்து க்ஷேத்திரத்தில் புண்ணிய மூர்த்தியாம் சுப்பிரமணியர் சன்னிதியில் வசிக்கலானார்கள்.

திரிஸ்வதந்திரர்களின் சரித்திரம்

வேதங்களின் கரை கடந்தவர்களான சில முனிபுங்கவர்கள் பிரம்மாவை நினைத்து கங்காநதி தீரத்திலே ஒரு வருஷத்துக்குத் துல்யமாக ஆயிரம் சதுர்யுகமளவும் மிகவும் கோரமான தவத்தைச் செய்தனர். உடன் பிரம்மாவானவர் அவர்களின் முன் தோன்றி "உங்களின் தவ மகிமை கண்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். உங்களுக்கு வேண்டியவற்றைக் கேளுங்கள்" என்றார். இதுகண்ட முனிவர்கள் மகிழ்ந்து வணங்கி, "ஓ சரஸ்வதி மணாளனே! எங்கள் தபசு கண்டு தேவரீர் மகிழ்ந்தீரானால் நாங்கள் விரும்பும் பொழுதெல்லாம் (1) தேவரீருலகடைந்து, தேவரை பூஜித்து அங்கு சில காலம் வாசம் செய்யவும், (2) அப்படியே ஸ்வர்க்க லோகம் சென்று தேவர்களைப்போல வாழவும், (3) இது போலவே புண்ணிய பூமியாகிய பூலோகத்தில் வாழவும்; இவ்வாறாக மூவுலகங்களிலும் இஷ்டம்போல் ஸஞ்சாரம் செய்து சுகம் பெற அனுக்கிரகிக்க வேண்டு"மெனப் பிரார்த்தித்து நின்றனர்.

பிரம்மன் தவசிகள் கேட்ட வரமதனைக் கொடுத்து மறைய, அதுகாலம் முதல் முனிவர்கள் தம் இஷ்டம் போல் மூன்று உலகங்களில் வசித்து சுகமடைந்தனர்.

இப்படி நிகரற்ற சுதந்திரத்தைப்பெற்ற முனிவர்களில் சிலர் புண்ணிய நதியான தாமிரவருணியின் கரையினிலே சிலகாலம் வாழ்ந்த பின்னர், ஸிந்து ஸ்தலத்தில் சென்று அவ்விடத்தில் ஸன்னிதானம் செய்யும் சுப்பிரமணியரால் வெகுமானிக்கவும், அது முதற்கொண்டு த்ரிஸ்வதந்திரர் எனப்பெயரும் பெற்று தேவர்கள்போல் சுகமாக வாழ்ந்தார்கள்.

இவ்வாறு விருத்தாசலத்தில் ஆயிரம்பேர்கள் பரமசிவனை ஆராதித்து அழிவற்றவர்களாய் லோகங்களைப் பரிசுத்தம் செய்துகொண்டிருக்கிறார்கள். ஸ்ரீ ஜெயந்தி என்னும் திருச்செந்தூரில் இரண்டாயிரம்பேர்கள் சுப்பிரமணியரை வழிபட்டும், சிதம்பரத்தில் மூவாயிரபேர்கள் நடராஜனை வழிபட்டும், பிரம்மபுரம் எனப்படும் சீர்காழியில் நாலாயிரம்பேர்கள் விஷ்ணுவை வழிபட்டும், அருணாசலத்தில் ஐயாயிரம்பேர்கள் எப்பொழுதும் பரமேஸ்வரனை நாமகீர்த்தனங்களால் வழிபட்டும், ஜகநாதமென்னும் க்ஷேத்திரத்தில் ஆறாயிரம்பேர்கள் விஷ்ணுவை வழிபட்டும், திருவிழி மலையில் ஏழாயிரம்பேர்கள் பரமசிவனை வழிபட்டும், ஹாலஷ்ய க்ஷேத்திரத்தில் எண்ணாயிரம்பேர்கள் மீனாக்ஷிசுந்தரேஸ்வரரைவழிபட்டும், தண்டகாருண்யத்தில் ஒன்பதாயிரம் பிராமணர்கள் ஸ்ரீராமமூர்த்தியை வழிபட்டும், கோகுலத்தில் பதினாயிரம்பேர்கள் மஹாவிஷ்ணுவை வழிபட்டும், நாராயண க்ஷேத்திரத்தில் பதினோராயிரம்பேர்கள் நாராயணனை வழிபட்டும், ஸ்வாமிமலையில் பன்னீரண்டாயிரம்பேர்கள் சுப்பிரமணியரை வழிபட்டும் சுகமே வாழ்ந்து வருகின்றார்கள்.

இவ்விதமான த்ரிஸ்வதந்திரர்களின் மகான்மியத்தைக் காலையில் எழுந்து எந்த புத்திமான்கள் மனதை நிலைநிறுத்திப் படிப்பார்களோ அவர்கள் எல்லாவிதக் கஷ்டங்களும் நீங்கி புருஷார்த்தங்களை அடைவார்கள்.

திரிஸ்வதந்திரர்களின் பெருமையும் சுப்பிரமணியரை ஒவ்வொரு மாதத்திலும் பூசை செய்யும் விதமும் அதன் பயனும்

இத் திரிஸ்வதந்திரர்கள் யாவரும் தேவரகஸ்யங்களடங்கிய ரிக்வேதிகள் ஆவர். அவர் யாவரும் அகங்காரம், மாத்ஸர்யம், கோபம், டம்பம் இவைகளில்லாதவர்கள். நான்கு வேதங்களையும் நன்கு உணர்ந்தவர்கள். ஔபாசனம், தேவதார்ச்சனம், பரமயக்ஞம், வைஸ்வதேவம், ஸ்மார்த்தகர்மம் இவைகளைக் குறைவின்றி நடத்துபவர்கள். பிரம்மா விஷ்ணு ருத்ரர்களிடத்து ஸமபுத்தியுடையவர்கள்.

பிரம்மஹத்தி, உபகாரத்தை மறைத்தல், குருவைக் கொல்லுதல், அவர் மனைவியைப் புணர்தலாகிய கொடிய பாவங்களைச் செய்தவர்களாயினும் அவர்கள் திரிஸ்வதந்திரர்கள் கிரகத்தில் பூஜிப்பதினால் தங்களைப் பற்றிய பாவங்களைப் போக்கிக்கொள்ளுகின்றனர்.

திரிஸ்வதந்திரர்கள் கிரகங்களில் நாள்தோறும் தேவர்கள், பிதிருக்கள் இவர்களை ஆராதிப்பதும், புண்ணிய தீர்த்தமாகிய ஸ்கந்த புஷ்கரணியில் பிரதி தினமும் ஸ்நானம் செய்தும் சுப்பிரமணியரைச் சேவித்தும் வருகிறார்கள்.

திரிஸ்வதந்திரர்கள் விதிப்படி தேக முழுவதும் விபூதியுத்தூளனம் செய்து ருத்ராக்ஷ மாலே அணிந்தும் இருப்பதால் இவர்களேத் தரிசிப்பவர்கள் ஸகல பாவங் களேயும் தொலேத்து பரிசுத்தராகின்ருர்கள்.

சுப்பிரமணியர் வள்ளி தேவியுடன் திரிஸ்வதந்திர முனிவர்களின் இருதய கமலத்தில் வாசம் செய்வதால் அன்னோர்கள் யாவராலும் வணங்கத் தக்கவர்கள். யாதொருவர் இவர்களுக்குத் தானம் செய்கிருர்களோ அவர்களுக்கு மோட்சம் கிடைக்குமென்பதில் சந்தே கமேயில்லே.

திருச்செந்தூரிலே ஸான்னியத்தியம் செய்யும் சுப்பிர மணியர் சன்னிதானத்தில் மாதந்தோறும் கார்த்திகை தினத்தில் கார்த்திகை நக்ஷத்திரத்தில் வதனுரம்ப தீர்த் தத்தில் ஸ்நானம் செய்து சுப்பிரமணியரைத் தரிசிக் கிறவர்கள் எல்லாவித பாவங்களுமகன்று நற்கதி பெறுகிருர்கள்.

எவர்கள் மாசி மாதத்தில் வதனுரம்ப தீர்த்தத்தில் ஒன்று அல்லது இரண்டு தடவை ஸ்நானம் செய்கிருர் களோ அவர்கள் மறுபிறவியடைவதில்லே.

ஐப்பசி, சித்திரை இந்த விஷுபுண்ணிய காலங் களில் ஸ்கந்த புஷ்கரணியில் ஸ்நானம் செய்கிறவர்கள் பாவ விமோசனத்தையும், தை, ஆடி இந்த அயன புண்ணிய காலங்களில் சண்முகனேத் தரிசிப்பவர்கள் வாஜிபேயம் என்ற யாகம் செய்த பலனேயும் பெறு கின்ருர்கள்.

ஆடி மாதத்தில் பக்தியுடன் எவன் தயிர் சேர்ந்த அன்னம் நிவேதனம் செய்கின்ருனே அவன் அவரது

ஸாருப்யத்தையும், ஆவணிமாதத்தில் அவர் ஸன்ன தியில் எவன் வேதபாராயணம் செய்கிறானோ அவன் யாகம் செய்த பயனையும் பெறுகிறான்.

புரட்டாசி மாதத்தில் புண்ணிய ஸ்தலமாகிய திருச் செந்தூரில் சென்று எவர்கள் சந்தோஷத்துடன் சிரார்த் தம் செய்கிறார்களோ அவர்களின் பிதுர்க்கள் பிரம்ம லோகத்தையடைகிறார்கள்.

மார்கழி மாதத்தில் பக்தியுடன் தத்தியோதனம் நிவேதனம் செய்கிறவர்கள் விஷ்ணு லோகமடை கிறார்கள்.

தை மாதத்தில் எவர்கள் குகனுடைய சன்னிதியில் அகில் பொடியாலோ, அல்லது சந்தனப் பொடியாலோ, தூபம் சமர்ப்பித்து பக்தியுடன் பூஜை செய்கிறார்களோ அவர்கள் கைலாசபதத்தையடைகிறார்கள்.

கார்திகை மாதத்திலேயே சுப்பிரமண்யர் சன்ன தியில் பசு நெய்யால் விளக்கு வைப்பவர்கள் முக்தியடை வதில் சந்தேகமில்லை.

வீரபாகு தேவருக்கு சுப்பிரமணியர் விபூதியை உபதேசித்தல்

ஆதியில் சூரபத்மாசுரன் வதமும் வள்ளி விவாகமும் நிகழ்ந்த பிறகு முருகக் கடவுள் ஜயந்தி க்ஷேத்திரத் திலே வள்ளி, தேவசேனையுடன் ஏகாந்தமாய் இருக்கும் பொழுது ஸர்வ கலா வல்லவனாகிய வீரபாகு, தன் குருமூர்த்தியான முருகனை நமஸ்கரித்து, "ஸ்வாமி

புவனேஸா, ஸர்வலோகஸ்ரண்யா, தேவரீர், இந்தப் பரமாண்டம் முழுவதும் எந்த விபூதியால் வியாபித்திருக்கிறீரோ அந்த விபூதியை நான் தியானித்து பூஜிப்பதற்கு எனக்கு உபதேசிக்க வேண்டும்'' எனப் பணிந்து வேண்டினன்.

அது கண்ட முருகப்பிரான், பக்தனை நோக்கி, ''நமது விபூதியானது எங்கும் நிறைந்திருக்கின்றது. நாம் உபதேசிப்பதைக் கேள். நீ பரிசுத்தனுவாய்'' என்று கூறி தேவசேனையின் பிரார்த்தனைக்கிசைந்து காட்சி தந்தருளிய ஸம்புவின் ஸன்னிதானத்திலே அமர்ந்து சின்முத்திரை தரித்து உபதேசிக்கின்ருர்.

''ஓ, கணநாயகா! என்னை ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் இவைகளுக்குக் கர்த்தாவாயும், பிரஜாபதிகளுள் பிரம்மனுகவும், உலகங்களில் ஸ்வர்க்கலோகமாகவும் நினைப்பாயாக''.

''கண்டங்களில் பாரத கண்டமாகவும், பர்வதங்களில் மேருவாகவும் தேவர்களில் இந்திரனுகவும், புத்திசாலிகளில் பிரகஸ்பதியாகவும் என்னை நினை''

''என்னை ஸாரதிகளுள் மாதவியாகவும், வாகனங்களில் புஷ்பகம் என்னும் ரதமாகவும், தேவமாதர்களில் ஊர்வசியாகவும், கானம் செய்பவர்களில் கந்தர்வனுகவும் நினை''.

என்னை மும்மூர்த்திகளின் உலகங்களில் கைலாசமாகவும், வாக்குகள் வேதங்களாகவும், உதாத்தம், அனுதாத்தம், ஸ்வரிதம், பிரஸயம் என்னும் ஸவரமாகவும், அக்ஷரங்களில் ஓம் என்னும் அக்ஷரமாகவும் நினை''.

"என்னை முனிவர்களில் அகஸ்தியனுகவும், யோகிகளில் தத்தாத்ரேயனுகவும், ஸித்தி பெற்றவர்களில் ஸனுதனுகவும் நினை"

"சிவபக்தர்களில் நாராயணனுகவும், புண்ணிய க்ஷேத்திரங்களில் காசியாகவும், பர்வதங்களில் இமய பர்வதமாகவும் என்னை அறிந்துகொள்".

"ஸ்ருஷ்டி செய்பவர்களுள் இரண்ய கர்ப்பனுகவும், ரக்ஷிப்பவர்களுள் மகா விஷ்ணுவாகவும், நாசம் செய்பவர்களில் காலாக்கினி ருத்திரனுகவும் என்னை நினை".

"உபதேசிப்பவர்களுள் தக்ஷிண மூர்த்தியாகவும், ஸ்திரிகளில் ஹ்ரீ, ஸ்ரீ, கீர்த்தி என்றவராகவும், மாதங்களுள் ஆவணி மாதமாகவும் என்னை நினை".

பிரம்ம ரிஷிகளுள் வசிட்டரும், தேவ ரிஷிகளுள் நாரதரும், கஜங்களுள் ஸர்வபௌமன் என்னும் கஜமும், பசுக்களுள் காமதேனுவும் நானே".

"குதிரைகளுள் சூரியன் குதிரையும், மிருகங்களில் ஸிம்ஹமும், பறவைகளுள் சரபம் என்பதும், ருத்திரர்களில் சங்கரனும் நானே".

"அரவங்களுள் ஆதிசேஷனும், தடாகங்களில் மானஸ தீர்த்தமும், மந்திரங்களுள் காயத்ரியும், விருஷங்களில் அரசும் நானே".

"கொல்பவர்க்குள் இயமனும், பரிசுத்தம் செய்பவர்களுக்குள் வாயுவும், குரங்குகளில் அனுமானும், வில்லாளிகளில் ராமனும் நானே".

"தர்மங்களுள் ஸத்தியமும், யக்ஞங்களுள் அஸ்வமேதமும், பதிவிரதைகளில் பார்வதியும் நானே".

"ஆசைப்படுவதற்குரிய வஸ்துக்களில் ஸ்திரீயும், தானங்களில் அபயதானமும், யதுகுலத்தரசர்களில் கிருஷ்ணனும் நானே".

அரிச்சந்திரனும், கங்கையும், க்ஷீரஸமுத்திரமும், சந்திரனும், வஸந்தருதுவும், மன்மதனும், பிராணயாமமும் நானேயாகின்றேன்".

"முத்தும், வஸ்திரமும், அர்யமாவும், இந்திரியங்களுக்குள் மனதும் நானே".

"புரூரவஸ்ஸும், குபேரனும், மணிகர்ணிகையும் பர்வதமும் நானே".

"ஸேதுவும், மாதாவும், ராமனும், தர்மபுத்திரனும் நானே".

"யௌவனவஸ்தையும், அந்தர்யோகமும், வாசுகியும், சீதையும், வியாசமுனியும் இன்னும், இம்மூவுலகங்களிலும் எவை இருக்கின்றனவோ அவையெல்லாம் நானே, என் அம்சமே. ஆகவே என்னை எப்பொழுதும் எங்கும் நிறைந்த பொருளாக எண்ணி விபூதியணிந்து த்யானித்து பூஜிக்கக் கடவை" என்று உபதேசித்தார்.

விஸ்வ ரூப தரிசனம்

இதுகேட்ட வீரபாகு, "ஓ லோகநாயகா! உமதடிமையாகிய நான் பூஜிப்பதற்கு உமது விபூதியைக் கேட்டதினால் கிருதார்த்தனானேன். அடியேனுக்குத் தாங்கள் விஸ்வரூபத்தைக் காட்டியருள வேண்டும்"

என்று கேட்க, முருகன் "வீரபாகு! தேவர்களும் காண்பதற்கரிதான இந்த விஸ்வரூபத்தை திவ்விய ஞானக்கண்களால் நீ பார்" என்று கூறவும், வீரபாகு பிரமாண்டம் முழுவதையும் முருகப் பிரபுவின் சரீரத்தில் கண்டார்.

தேவர்கள், கந்தர்வர்கள், ருத்திரர்கள், சந்திரன், சூரியன், ஆகாசம், குலபர்வதம் மகாமேரு பர்வதம், கங்கை முதலியவைகளைக் கண்டார். நான்கு முகத்துடன் கூடிய பிரம்மாவைக் கண்டார். ஆனந்த நர்த்தனம் செய்யும் பரமசிவனையும், பாற்கடலில் பள்ளி கொண்ட நாராயணனையும், தவம்புரியும் கபிலரையும் கண்டார்.

முருகன் திருமேனியில் பதினன்கு உலகங்களையும் கண்டார். மேலும் திவ்ய ஆபரணங்கள் அணிந்து, பீதாம்பரம் தரித்து, திவ்விய குண்டலங்களோடு கோடி மன்மதர்களுக்கு நிகராகவும், கோடி சூரியப்பிரகாசம் போல் ஜொலிக்கிறவரும், உக்கிரமான நேத்திரங்களையுடையவரும், கோடி சந்திரர்களுக்குத் துல்லியமான குளிர்ச்சியுடையவரும், ஆதி அந்தமில்லாதவரும், நிர்மலமாக உள்ளவருமான முருகனையே கண்டார்.

இதுகண்ட வீரபாகு மிகமிக நடுங்கி நமஸ்கரித்து முருகனை நொக்கித் தாழ்ந்த குரலிலே, "தேவனே, உம்மைத் தேவர்கள் துதிக்கின்றனர்; கந்தர்வர்கள் இசைக்கின்றனர்; முனிவர்கள் தியானம் செய்கின்றார்கள்; கின்னரர்கள் துதி பாடுகிறார்கள்; யோகிகள் திகைக்கிறார்கள், திக்பாலர்கள் பயப்படுகிறார்கள். சுவாமி, என்னால் உம்மைப் பார்க்கமுடியவில்லை, தியானிக்கவும்

மனது நிலைக்கவுமில்லை. உம்மை முன்பாகவும், பின்பாகவும், இரண்டுபக்கங்களிலும் நமஸ்கரிக்கிறேன். உம்மை எப்பொழுதும் நமஸ்கரிக்கிறேன். நான் வீரன், பலவான் என நினைத்து அபராதியானேன். தேவரீர் என்னை மன்னித்து விஸ்வரூபத்தை மறைத்து ஸெம்யமான ரூபத்தைக் காண்பிக்கவேண்டும்'' என்றார்.

முருகனும் வீரபாகுவைத் தன் கைகளால் எடுத்து அணைத்து, ''அன்பனே! முன்னால் இந்த ரூபத்தைக் காண்பதற்காக தேவர்களும், முனிவர்களும், சித்த கணங்களும், நந்தியும் தவம் செய்ய நான் அவர்களிடம் ஜயந்தி க்ஷேத்திரத்திலே பக்தன் வீரபாகுவால் பிரார்த்திக்கப்பட்டு நான் விஸ்வரூபத்தைக் காட்டுகின்றேன். நீங்கள் எல்லோரும் பாருங்கள் என்று சொல்லியிருந்தேன். ஆகவேதான் இந்த ரூபத்தைக் காட்டினேன். ஆகவே, வீரபாகு, எவர் என்னையே சரணடைந்து என் நாமங்களைக் கீர்த்தனம்செய்து; என் கதைகளை, என் மந்திரத்தை ஆவலுடன் ஜபிக்கிறார்களோ அவர்கள் என்னை அடைவது நிச்சயம்'' என்று கூறினார். வீரபாகுவும் விஸ்வரூபத்தை நினைத்து மகிழ்ந்தார்.

நாரதர் விஸ்வரூபம் கண்டு வைகுண்டம் சேர்தல்

விஷ்ணுவும் நாரதரும் திருச்செந்தூருக்கு எழுந்தருளல்

விஸ்வரூப தரிசனம் கண்ட நாரதர் பேரானந்தமடைந்து வீணையால் தன் மேனி விளங்க விஷ்ணு இருப்பிடமாகிய வைகுண்டம் அடைந்தார். ஆங்கு ஸனந்தர், நந்தர், கருடன், ஆதிசித்தர்கள், ஸனகர்,

காமதேனு, சித்தர்கள், அப்ரஸ்திரீகள், பக்தர்கள் ஆகியோர் மஹாவிஷ்ணுவைத் தியானித்து நிற்பதைக் கண்டார். விஷ்ணுவானவர் நாரதரை நோக்கி, ''நாரதா! நீ ஏதோ ஆச்சரியம் கண்டு என்னிடம் சொல்ல வந்தவராகத் தெரிவதால் அதனை உடனே தெரிவியும்'' என, நாரதரும் சொல்லலானார்:—

சண்முக பகவான் வள்ளி, தேவ சேனையுடன் ஜயந்திபுரமென்ற திருச்செந்தூரிலே சகல தேவர்களும் சேவிக்க, வீரபாகுவுக்கு காட்சியளித்தார். அதிசயிக்கத் தக்க விஸ்வரூப தரிசனத்தை திரிஸ்வதந்திரர்களுடன் அடியேனும் தரிசித்தேன். இச் செய்தியைத் தேவரீருடைய திருவடிகளில் சமர்ப்பித்துச் செல்லவே வந்தேன்'' என்று சொன்னார். இதுகண்ட பகவான், தனது மந்தஹாஸங்களால் வைகுண்டம் முழுவதும் பிரகாசிக்கச்செய்து, ''ஓ நாரதா! உமக்கு ஒரு தத்துவத்தை விளக்குகின்றேன் கேளும். இதனால் நீர் பரிசுத்தனாவீர். அந்த சுப்பிரமணியன் நானும் ஸம்புவும் சேர்ந்த மூர்த்தியே ஆவார். சிவனுடைய ஐந்து முகத்துடன் எனது ஒரு முகமும் சேர்ந்து ஆறுமுகாயிற்று. என் நான்கு கரங்களுடன் சிவனின் எட்டு கரங்களும் சேர்ந்து பன்னிரண்டு கரங்களாயின. சிவனின் சூலமும் எனது சக்கரமும் சேர்ந்து முருகனின் வேலாயிற்று. சிவனுடைய வலது நேத்திரத்திலிருந்து உண்டான வள்ளியும், எனது வலது நேத்திரத்திலிருந்து உண்டான தேவசேனையும் குகனின் இரு தேவிமாரானார்கள். அவரிடம் நாங்கள் வசித்து வருகின்ற காரணத்தால் ப்ரமண்யம் அதிகரித்து சுப்ரமண்யம் என்று அழைக்கப்படுகிறார். அஸ்டாக்ஷரம் (ஓம் நமோ நாராயணாய) பஞ்சாக்ஷரம் (ஓம்

நமசிவாயா) இவை இரண்டுஞ் சேர்ந்தே ஸரவணபவ என வந்தது. பூமி முழுவதும் எனது சொரூபமும், பர்வதங்கள் முழுவதும் சிவசொரூபமாகவும் இருக்கின்றன. ஹரிஹர சொரூபமான ஆறு தினங்களும் (பிரதமை, துவிதியை, திருதியை, சதுர்த்தி, பஞ்சமி, ஷஷ்டி) கிருத்திகாதேவிகளாம். என்னையும் சிவபிரானையும் ஆராதிக்கும் பலனைக் குக பக்தர்கள் பெறுகிறார்கள். பிரம்மாவும் ருத்ரனும் குகனுக்கு இருபாகங்களிலும், நான் நடுவிலுமாக வசிக்கிறோம்".

இவ்வாறு கூறிய விஷ்ணுவானவர் நாரதரால் பின் செல்லப்பட்டு, ஒரு நிமிஷத்தில் லக்ஷிமியுடன் ஜயந்திபுரம் வந்தடைந்தார். அங்கு வந்த விஷ்ணுவானவர் அதையே தனதிருப்பிடமாகக் கொண்டார். பிரம்மாவும் ஐந்தாவது முகம் கிடைப்பதற்காக அங்கேயே வாசம் செய்கின்றார்.

இப்படிப்பட்ட குகனுடைய நாம ஸங்கீர்த்தனத்தைத் தியானிக்கிறவர்கள் ஹரி, ஹரன் இருவர்களுக்கும் பிரியராகிறார்கள்.

தேவேந்திரனுக்குச் சாபம் கிடைத்ததும் அதன் விமோசனமும்

முன்னொரு காலத்தில் துர்வாஸமுனி தனக்குக் கிடைத்த பாரிஜாத மாலையை எடுத்துக்கொண்டு ஆகாய மார்க்கமாக வரும் வழியில் இந்திரனைக்கண்டு அவனிடம் அந்த மாலையைக் கொடுத்தார்.

இந்திரன் அம்மாலையை வாங்கி அதை அலட்சியமாக ஐராவதத்தின் மேலெறிய, அதுவும் அதனைத் தன் துதிக்கையால் கசக்கி தூர எறிந்தது. இதுகண்ட துர்வாஸ முனி வெகுண்டு, "ஓ தேவராசனே! நீ என்னை அவமதித்தபடியால் சிலகாலம் ஐஸ்வரியத்தை இழக்கக் கடவை" என்று சபித்தார். "இனி ஒருக்கால் அமிர்தத்தின் காரணமாக ஸமுத்திரமதனம் நடக்கின்ற காலத்தில் மகாலக்ஷ்மி தோன்றுவாள். அவள் கிருபையினால் உனது சாபம் நீங்கும். அதுவரை நீ ஆறுமுகப் பிரபுவைத் தியானிப்பாயாக" என்றார். இதன்படி இந்திரன் திருச்செந்தூரை அடைந்து, வதனாரம்பத்தில் ஸ்நானம் செய்து, முருகனை வழிபட்டு, வரலக்ஷ்மியின் கிருபையால் கிருதாயுகத்தின் மத்தியில் சாபத்திலிருந்து விடுபட்டு முன்போல் தன் பதவியை அடைந்தான். ஐராவதமும் ஜயந்தியை அடைந்து குகனை வழிபட்டுத் தான் செய்த பாவத்தை நீக்கிக்கொண்டது.

காசி முனிவர்கள் கூறிய ஸ்தலமகிமை

வஸிட்டர்:- இப் பூமியில் போக மோக்ஷங்களைத் தரும் ஸ்தலங்கள் அநேகம் இருப்பினும் அவை யாவும் சந்தேகமின்றி ஜயந்திக்குக் கீழ்ப்பட்டவைகளே.

வாமதேவர்:- பிரம்மஹத்தி செய்தவனும், வேதங்களைத் தூஷித்தவனும்கூட ஜயந்தியில் ஒருநாள் வசிப்பானாகில் பரிசுத்தன் ஆகிறான்.

ஜபாலி:- புஷ்கரணிக்கீடானது எதுவுமில்லை.

காஸ்யப்பர்:- பிரயாகையில் ஆயுள் பரியந்தம் ஸ்நானம் செய்யும் பலனை கார்த்திகை நக்ஷத்திரத்தில் ஒரு தடவை சுப்பிரமணியர் ஸன்னதியில் ஸ்நானம் செய்வதால் அடைகிறான்.

மார்க்கண்டேயர்:- ரிஷிகள் காசியில் ஒரு வருடத்தில் சம்பாதிக்கிற புண்ணியத்தைத் திருச்செந்தூரில் ஒரு நாளில் அடைவார்கள்.

கௌதமர்:- ஆயிரக்கணக்கான யுகங்கள் செய்யும் அன்னதான பலனை ஜயந்தியில் வசிப்பதால் அடையலாம்.

மௌத்கல்யர்:- தவத்தின் பயனை ஜயந்தி வாசத்தால் பெறலாம்; இது சத்தியம்.

விஸ்வாமித்திரர்:- நூறு அஸ்வமேத யாகங்களினால் பெறும் பயனை ஜயந்தி வாசத்தால் கோடி பங்கு அதிகமாகப் பெறலாம்.

ஸிந்து ஸ்தலத்தில் வசிக்கும் சுப்பிரமணியரைத் தியானிக்காமல் இருப்பவன் கழுதையாகப் பிறக்கின்றான். இந்த இடத்தில் மரித்த கழுதையும் மறுபிறப்பு ஒழிந்து மோக்ஷத்தை அடைகின்றது.

அதிதி தேவி ஸந்தானம் பெற்றது

அதிதி தேவியானவள் புத்திர பாக்கியத்தைப் பெறும் பொருட்டு அதன் உபாயத்தை உபதேசிக்குமாறு நாரதரைக் கேட்க, அவர் "தேவி! கார்த்திகை மாதத்தில் பௌர்ணமி தினத்தில் அதிகாலையில் ஸ்நானம் செய்து தயாமூர்த்தியாகிய குகனை வணங்கவேண்டும், சூரபன்மன் மரமாய் நிற்க முருகன் அதைச் சோதித்த இடத்திலிருந்து மண் எடுத்து வேல் ரூபம் செய்து பன்னிரண்டு நமஸ்காரம் செய்து, குமாரகுத்தம் என்னும் மந்திரத்தை நூற்றெட்டுத் தடவை ஜெபித்

தால் நீ வேண்டும் வரத்தினை முருகன் அருளுவான்'' என்று கூற, அதிதி தேவியும் அவ்வாறு செய்து இந்திரனையும், உபபேந்திரனையும் புத்திரர்களாகப் பெற்றாள்.

துலுக்கன் மோட்சமடைந்த சரித்திரம்

முன் ஒரு காலத்தில் ஒரு துலுக்கன் கப்பல் யாத்திரை செய்துவரும் வியாபாரிகளைக் கொன்றும், அவர்களின் பணத்தைக் கொள்ளையடித்தும், துஷ்டர்களைக் கூட்டிக்கொண்டு பசுக்களைக் கொன்றும் அவைகளின் மாமிசத்தைத் தின்றும் வந்தான். அவன் ஒரு நாள் திருச்செந்தூரையடைந்து குகனை நோக்கி, 'இது யார்'? என்று திரிஸ்வதந்திரர்களை நோக்கிக் கேட்டான். உடன் திரிஸ்வதந்திரர்கள் முருகனின் மகிமையைச் சொல்ல, அவன் சிரித்து குகனைத் தூஷித்து, வாளைக் கையிலெடுத்துக்கொண்டு அவரை நோக்கி ஒடும்போது கால் இடறிக் கீழே விழுந்து உயிர் நீங்கினான். அவன் உயிரைக் கொண்டுபோக வந்த யமதூதர்கள் குகதூதர்களால் விரட்டியடிக்கப்பட்டு நிகழ்ந்ததை யமனிடம் கூற, யமன் உடனே ஜெயந்தியை அடைந்து முருகனை வணங்கி, "சுவாமி! இந்தத் துலுக்கன் உலகிலேயே சகல பாவங்களையும் செய்தவன். இவன் உயிரைக் கொண்டுவர வந்த தூதர்கள் தங்கள் தூதர்களால் விரட்டப்பட்டார்கள். இவன் எப்படித் தப்பித்தான்? இந்த அதிசயத்தைக் கேட்கவே வந்தேன்'' என்றான்.

அது கண்ட குகனும் "யமனே! இவன் இந்த ஜயந்திபுரத்தை வந்தடைந்த உடனேயே தன் சகல பாவங்களையும் நீக்கிவிட்டான். அவன் அதனாலேயே மோட்சத்திற்கு அருகதை பெற்றுவிட்டான். நாம்

கிருபை செய்துவிட்டோம். நீ உன் இருப்பிடம் செல்வாயாக", என்று கூற யமனும் தன் இருப்பிடம் போய்ச் சேர்ந்தான்.

நினைத்த மாத்திரத்திலே முக்தியை அடைவதற்குரிய ஒரே இடம் முருகன் இருப்பிடமாகிய திருச்செந்தூரேயாகும்.

ஸூகர் திருச்செந்தூர் வந்து முருகனைத் தியானித்தல்

சுப்பிரமணியரின் மகிமையைக் கேட்ட ஸூகர் மிகவும் மகிழ்ந்து ஹரித்துவாரம், கேதார க்ஷேத்திரம், பிரயாகை, கோகர்ணம், திருப்பதி, விருத்தாசலம், காளஹஸ்தி, சிதம்பரம், ஸ்ரீரெங்கம், மதுரை முதலிய இடங்களில் வாசம் செய்துவரும் தெய்வங்களை வணங்கிப் பின்னர் ஜெயந்திநகரை அடைந்து ஆனந்தப் பரவசம் கொண்டு ஆறுமுகனை வணங்கினர்.

"ஆறு முகங்களையும் ஈராறு கைகளையும் உடையவரும் வல்லி, தேவஸேனை என்ற இரண்டு தேவிமாருடன் கூடியவராயுமுள்ள மயில் வாகனனாகிய குகனை வணங்குகின்றேன்".

"ஆனந்த மூர்த்தியாக விளங்கும் சண்முகனை நமஸ்கரிக்கிறேன்".

"உலக மாதாவின் திருமகனாய் விளங்கும் சுப்பிரமணியரை நமஸ்கரிக்கிறேன்".

"ஆலயசொரூபியும், ஆகாயத்தைக் கடந்தவரும், தேவர்களால் சேவிக்கப்பட்டவரும், மயில் வாகனரும், எங்கும் நிறைந்தவருமாகிய முருகனை வணங்குகின்றேன்".

இவ்வாறுக ஸுகருக்கு வியாசரால் சொல்லப்பட்ட முருக பரமாத்மாவின் மகிமையை யார் சொல்லுகிறுர்களோ, யார் கேட்கிறுர்களோ, அவர்கள் எல்லோரும் சகல பாக்கியங்களேயும் பெற்று முருகன் அருளுக்கும் பாத்திரமாகிறுர்கள்.

ஓம் குகாயநம. ஓம் குகாயநம. ஓம் குகாயநம.

முருகா ! முருகா !! முருகா !!!

வருவாய் ! வருவாய் ! வருவாய்! வரமே தருவாய்!

திருச்செந்தூர்

இவ்வூர் திருநெல்வேலி மாவட்டத்தில் நெல்லை நகருக்கு 36 மைல் தெற்கேயுள்ளது. இது முருகனின் ஆறுபடை வீடுகளில் ஒன்ருக அமைந்து பாடல் பெற்ற ஸ்தலமாகும். அப்பனின் ஆலயம் அலை வந்து மோதும் கடற்கரை அருகே அழகுற அமைக்கப்பட்டுள்ளது. இதனுல் இத்தலம் திருச்சீரலைவாய் எனப் பெயர் பெற்றுள்ளது. இது 20000 ஜனத்தொகை கொண்ட பெரிய ஊராகும். இவ்விடம் முருகப்பிரான் சூரனை சம்ஹாரம் செய்து அவ் வெற்றியைக் கொண்டாடிய தால் ஜெயந்திபுரமென்றும் அழைக்கப்படுகிறது. கந்த மாதன பர்வதத்தைக் குடைந்து இங்குள்ள ஆலயம் முன்பு அமைக்கப்பட்டுள்ளதற்குச் சான்ருக பிரகாரத் தில் பள்ளிகொண்ட பெருமாளும் கஜலெக்ஷிமியும் காட்சி தருகின்றனர்.

கோவிலினுள் நாம் செல்லும்பொழுதே ஆறுமுகப் பெருமான் காட்சி தருகின்ருர். கிழக்கு நோக்கி

நிற்கின்ற திருக்கோலத்திலே சுப்பிரமணியர் காட்சி கொடுக்கின்றார். முருகப்பெருமான் மூலஸ்தானத்தில் சிவலிங்கத்தைப் பூஜிப்பதாக ஐதிகம்.

ஊரின் மத்தியில் ஒரு பழைய சிவன் கோவில் அமைந்துள்ளது

கடற்கரை ஓரத்திலே ஓர் அழகிய குகைக்கோயில் உள்ளது. ஈண்டு ஸ்ரீ வள்ளி தேவியார் ஒளிந்து கொண்டதாக ஐதீகம்.

ஆலயத்தில் ஒன்பதுகாலமும் நடைபெறும் பூஜைகள் கண்கொள்ளாக் காட்சிகளாகும்.

ஊமையாய் இருந்த குமரகுருபரர் தமது ஐந்தாவது வயதில் முருகன் அருள் பெற்றுக் "கந்தர்கலி வெண்பா" பாடிய ஸ்தலம் இதுவே.

திருநாளும் தரிசனமும்

சித்திரை — விஷு புண்ணிய நாள் — முருகனுக்கு அன்னபிஷேகம் நடைபெறும்.

வைகாசி — சுக்கிலபக்ஷ ஷஷ்டியில் வசந்தத் திருநாள் ஆரம்பமாகி 10 தினங்கள் நடைபெறும். விசாகத்தன்று லக்ஷக்கணக்கான ஜனங்கள் கூடி முருகனைத் தரிசித்து மகிழுவார்கள்.

ஆனி — உத்திர நக்ஷத்திரத்தில் நடராஜப் பெருமானுக்கு அபிஷேக அலங்காரங்கள் நடைபெறுகின்றன.

ஆடி — இம்மாதத்தில் பார்வதியம்மன் முளைக் கொட்டு ஊஞ்சல், சேரமான் பெருமாள் திருநாள், ஆடி அமாவாசையன்று காலை தீர்த்தவாரி முதலியவை நடை பெறும்.

ஆவணி—அஸ்வதி நக்ஷத்திரத்தில் ஆவணித் திரு நாள் ஆரம்பமாகி 12 தினங்கள் நடைபெறும். சுவாமி தங்க மயில், இந்திர விமானம், கனக தண்டிகை இவைகளின் மீது வீதி வலம் வருவது கண்கொள்ளாக் காட்சியாகும்.

புரட்டாசி — நவராத்திரி உத்ஸவம் நடைபெறும்.

ஐப்பசி — 1-ம் உ ஸ்ரீ ஷண்முகர் அன்னபிஷேகம் நடைபெறும். பிரதமையில் கந்தர் சஷ்டி உத்ஸவம் ஆரம்பித்து 6 தினங்கள் நடைபெறும். மறுநாள் மாலை சூர ஸம்ஹாரமும் நடைபெறும். திருக்கல்யாண கோல மும் கண்கொள்ளாக் காட்சியாகும்.

கார்த்திகை - ஜோதி தரிசனம்.

மார்கழி — திருவாதிரையன்று நடராஜர் தரிசனம்.

தை — பூச நக்ஷத்திரத்தில் சுவாமி தங்க மயில்மீது அமர்ந்து வீதி வலம் வருவார்.

மாசி — இந்த மாதம் பெரிய திருநாள் நடைபெறும். இந்த உத்ஸவம் அஸ்வதி நக்ஷத்திரத்தில் ஆரம்பமாகும். மக நக்ஷத்திரத்தில் பெரிய ரதத்தின் மேல் சுவாமி அமர்ந்து வலம் வருவார்.

பங்குனி — உத்திர நக்ஷத்திரத்தில் ஸ்ரீ வள்ளிநாயகி திருக்கல்யாணம் நடைபெறும்.

திருச்செந்தூர் ஆண்டவன் மகிமை

கி. பி. 17-ம் நூற்றுண்டில் டச்சு நாட்டு கடற் கொள்ளைக்காரர்கள் திருச்செந்தூர்க் கோயிலைக் கொள் ளையடித்தனர். அது காலை ஆங்கிருந்த கற்சிலைகளை எல்லாம் உடைத்தனர். தெற்கு முகம் நோக்கி வீற்றிருந்த பசும் பொன் போன்ற செம்புத் திருவுருவ மாகிய ஆறுமுகநயினுரைத் தூக்கித் தங்களின் கப்ப லுக்குக் கொண்டு சென்றனர். கப்பல் புறப்பட்ட சிறிது நேரத்தில் பெரும் புயலும் கனத்த இடியும் மழையும் உண்டாகவே அவர்கள் பயந்து திருவுருவத் தைக் கயிற்றில் கட்டிக் கடலில் இறக்கிவிட்டுச் சென் ருர்கள்.

ஆலயத்தில் ஆண்டவன் ஆறுமுகநயினுரின் அரு மைத் திருவுருவைக் காணுத பக்தர்கள் ஆற்ருெணுத் துயரை அடைந்தனர்.

அக்காலத்தில் நெல்லை மாவட்டத்தில் ஆங்கிலே யரின் பிரபல குத்தகைக்காரராக விளங்கியவர் வட மலையப்ப பிள்ளையன் என்பவர் ஆவர். இவர் சிறந்த முருக பக்தர் நற்புலவராகவும் விளங்கி வந்தார்.

இவரது கனவிலே முருகப் பெருமான் தோன்றி கடலில் தான் இருக்கும் இடத்தின் அடையாளத்தைக் கூறினுர். அதுகேட்டு உவகை மிகக் கொண்ட பிள்ளை யன் அவர்கள் பலரோடு வள்ளத்தில் சென்று அடை யாளம் காணப்பட்ட இடத்தில் பக்தி பெருக்கால் கடலில் குதித்தார். கடலில் ஆழமும் அரையளவு ஆயிற்று.

அவர் முதலில் நடராஜர் சிலையையும் பின்னர் ஆறுமுகநயினாரின் திருவுருவத்தையும் கண்டெடுத்து வள்ளத்தில் ஏற்றி ஆண்டவன் ஆலயத்தில் கொண்டு வந்து சேர்த்தார். பக்தர்களின் உள்ளம் பரவசத்தில் ஆழ்ந்தது.

இன்று இந்தத் திருவுருவங்களையே நாம் ஆண்டவன் ஆலயத்தில் காண்கின்றோம். இவ்வாறு கடலிலிருந்து எடுக்கப்பட்ட நாள் கொல்லம் 829-ம் ஆண்டு தை மீ 29உ வெள்ளிக்கிழமை என்பது கல்வெட்டுக்களில் காணக்கிடக்கின்றது. அஃது ஆங்கிலக் கணக்குப்படி கி. பி. 1653-ம் வருடமாகும்.

வடமலையப்ப பிள்ளையன் அவர்கள் கட்டிய மண்டபத்தில் மாசி, ஆவணித் திருநாட்களில் ஏழாம் நாளன்று ஆறுமுகநயினார் எழுந்தருளி வருவது பிள்ளையன் முருகன்பால் கொண்டுள்ள பக்திக்கு ஓர் எடுத்துக் காட்டாக வுள்ளது.

வடமலையப்ப பிள்ளையனைப் போலவே முருகப் பிரான் மீது அளவற்ற பக்தியுடன் வாழ்ந்து வந்தவர்களில் பாஞ்சாலங்குறிச்சியை ஆண்ட மன்னர் கட்டபொம்முவும் ஒருவராவர்.

இம் மன்னர் தான் கட்டிய மண்டபத்திலே ஏழாம் திருநாளன்று செந்திற்பெருமானை அழைத்துச் செல்ல விரும்பினர். இதை வடமலையப்ப பிள்ளையன் அவர்களிடம் கூற, இவரது அதிகாரத்திற்கு அஞ்சிய பிள்ளையனும் வாளா இருந்தார். எனினும் சுவாமி புறப்பட்டுப் பிள்ளையன் மண்டபத்தினருகில் வந்தவுடன் மேலும் செல்லவிடாமல் கன மழை பொழிந்தது

இடி இடித்தது. மின்னல் மின்னியது. யாவரும் பயந்து நடுங்கினர். கட்டப்பொம்மு கலக்கம் கொண்டார். கண்ணீர் சிந்திக் கதறினர். தான் செய்த தவற்றை உணர்ந்தார். பிள்ளையன் மடத்திலேயே சுவாமியை எழுந்தருளச் செய்ய உத்திரவிட்டார். பிள்ளையனிடம் மன்னிப்பு வேண்டி நின்றார். பிள்ளையன் மண்டபத்திலே சுவாமி எழுந்தருளியதும் மழை நின்றது. பகலவன் தோன்றினன் மக்கள் களித்தனர். முருகனின் மகிமையும் பிள்ளையன்பால் கொண்டுள்ள அன்பும் நன்கு விளங்கின. இன்னும் இந் நகரிலே மன்னர் கட்டப்பொம்மு கட்டிய பல மண்டபங்களையும் காணலாம்.

முருகப்பெருமான் ஆழ்வார்திருநகரியில் வாழ்ந்த வைணவ அந்தணர் ஒருவரிடம் தன்மீது பாக்கள் புனையும்படி கனவில் தோன்றி கூறினர். அந்தணர் வைணவரானதால் முருகன்மீது பாட மறுத்துவிட்டார். இது கண்ட முருகப்பெருமான் மறுவேடம் பல பூண்டு அவரை மயக்கப் பார்க்க இதனல் வைணவர் மிகவும் மன வியாகூலம் கொண்டு ஆதிநாதப்பெருமாள் தன்னைக் கைவிட்டதாத எண்ணி உயிரை மாய்க்கத் துணிந்தார். இஃது அறிந்த முருகன் பிள்ளையன் கனவில் தோன்றி வைணவரைச் சிறைசெய்யும்படி சொல்லி, அவர் உயிரை மாய்க்காதிருக்கும்படிச் செய்தார். இதையெல்லாம் பிள்ளையன் வாயிலாக அறிந்த அந்தணர் முருகன் தன் மீது கொண்டுள்ள அன்பை நினைத்து உருகி முருக தாசனகிச் "சிறைவீடு அந்தாதி" என்ற நூலைப் பாடினர். சில பாடல்கள் பாடப்பெற்றதுமே அந்தணர் கரங்களில் மாட்டப்பட்டிருந்த வெள்ளிச் சங்கிலி "படார் படார்" எனத் தெறித்து விழுந்தது.

முருகப் பெருமான் மீது சிறந்த பக்திகொண்ட கந்தசுவாமிப் புலவர் என்பவர் வாயில் நிறைய வெற்றிலை பாக்கைச் சுவைத்துக் கொண்டு முருகன் மீது பாட ஆரம்பித்தார். இவரது இசை கேட்டு முருகன் உள்ளம் உருகியது. மறு நாள் காலையில் செந்திலாண்டவன் திருவுருவத்தில் வெற்றிலை எச்சில் காணப்பட்டது. கலங்கித் திகைத்தார் அர்ச்சகர். அவரது கனவிலே தோன்றி "கந்தசாமி கவி பாடும் பொழுது தெறித்த எச்சில் இது" என விளக்கி மறைந்தார் சண்முகநாதன்.

ஆலயமும் கோபுரமும்

இப்பொழுது நாம் காணும் கோவிலின் ராஜ கோபுரம் கட்டப்பட்டு சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாகின்றது. இது திருவாவடுதுறை ஆதீனம் தேசீக மூர்த்தி சுவாமிகள் என்னும் பெரிய மஹானுல் முருகன் அருளாலும் மகிமையாலும் கட்டப்பட்ட தாகும். சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னர்த் திருப்பணி உண்டியல் வசூல் மூலம் ஆறுமுகசுவாமி அவர்களால் கோவில் சண்முக விலாசம், சீவிலி மண்டபம், வள்ளி யம்மன் கோவில் முதலியவைகள் கட்டப்பட்டன. 25 வருடத்திற்கு முன்பாக கிரிபிரதஹிண நடைபாதை வள்ளிநாயக சுவாமிகளால் கட்டப்பட்டது. மேற்கண்ட சுவாமிகளின் சிலைகள் கோவிலின் உள்ளே வள்ளியம்மன் சன்னதியிலே வைக்கப்பட்டுள்ளன. ஷண்முக விலாசத் தினின்றும் நாழிக்கிணறு வரை நடைபாதை அழகுற அமைக்கப்பட்டுள்ளது. மேலும் க்ஷண்முக விலாச மண்ட பத்தின் முன்புறங்களில் ஆறுபடை வீடுகளின் அழகிய தோற்றங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

திருச்செந்தூரைப் பற்றிப் பாடிய பாடல்கள்

இத்தலம் ஆதி யுகத்திலே தோன்றியதாகக் கந்தபுராணம் கூறுகின்றது.

சுரமது கடந்த நீங்கிச் சோதிவே லுடைய வள்ளல்
விரிபுனல் சடிலத் தண்ணல் மேவுசெங்குன்றூர் நோக்கிப்
பருமணி வயிரம் முத்தம் பலவளம் பிறவும் ஆழித்
திரையெறி அலைவா யாகும் செந்திமா நகரம் புக்கான்.

இவ்விதமாக முருகப்பெருமான் தேவர்களுடன் திருச்செந்தூர் வந்து தங்கினதாக அந்நூல் விவரிக்கின்றது.

தேவர்களுக்கு தரிசனம் கொடுத்த காட்சி

வீறுகேதனம் வஜ்ரம் அங்குசம் விசிகம் மாறில்லாத வேல்
அபயமே வலம் இடவரதம் ஏறுபங்கயம் மணி
மழுதண்டு வில்இசைந்து ஆறிரண்டு கை
அறுமுகம் கொண்டுவேள் அடைந்தான்.

இவ்விதம் தெற்கு நோக்கி அமர்ந்திருக்கும் ஆறுமுகப்பெருமான் மேலே கண்ட பாட்டின் கருத்துப் படியே இன்றும் சன்னிதி நோக்கிவரும் பக்தகோடிகளுக்கு அருள் புரிந்து கொண்டிருக்கிறார்.

மேலும்

"வெண்டலைபுணரி அலைக்குஞ் செந்தில்"

என்று புறநானூறும்

''திருமணி விளக்கின் அலைவாய்''

என அகநானூறும்

''சீர்கெழு செந்தில்''

எனச் சிலப்பதிகாரமும்

''உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழு சீரலைவாய்''

எனத் திருமுருகாற்றுப்படையும் திருச்செந்தூரைப் பற்றிக் கூறுகின்றன.

திருமுருகாற்றுப்படை பாடி முருகன் கைவேல் வந்து நம்மைக் காக்கும் என எதிர்பார்த்த நக்கீரரும் புலவர்களும் வேல் வராதது கண்டு மறுபடியும் ''முருகனே செந்தில் முதல்வனே'' ''உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்'' ''காக்கக் கடவிய நீ'' என்ற பாடல்களைப் பாடியவுடன் திருச்செந்தூர் முருகன் கைவேல் போய் அவர்களைச் சிறை மீட்டுக் காத்தது.

மேலும் திருச்செந்தூர்க் ''கந்தர் கலிவெண்பா'' பாடிய குமரகுருபர சுவாமிகள் ''கருணை வெள்ளமென தவசில் வீற்றிருந்து எவ்வுயிர்க்கும் தஞ்சமென நிற்கும் தனிப் பொருளாய்'' என்று புகழ்ந்து பாடியுள்ளார்.

பிள்ளைத்தமிழ் பாடிய பகழிக்கூத்தர் ''பேராதரிக்கும் அடியவர் தம் பிறப்பை யொழித்துப் பெரு வாழ்வும் பேறும் கொடுக்க வரும் பிள்ளைப்பெருமான்'' என்று புகழ்ந்து கூறியுள்ளார்.

"ஒழிந்தன துன்பம் உவந்தன உள்ளம்
இழிந்தன நம் வினை யெலாம்
செழும்புனற் சேந்தன் திருச்செந்தில் சேர்ந்து" என்று செந்திற் கலம்பக ஆசிரியர் பாடி இருக்கின்றார்.

முருகப் பெருமானது பன்னீர் இலை விபூதிப் பிரஸாதம் பூசிய மாத்திரத்தில் சகல விதமான பிணிகளும் நீங்கப்பெற்று மேலான நல்வாழ்வையடைவார்கள் என்பதை ஒரு பெரியார் கீழ்க்கண்ட பாடலால் விளக்குகின்றார்.

"வந்தவினையும் வருகின்ற வல்வினையும்
கந்தனென்று சொல்லக் கலங்கிடுமே—செந்திநகர்ச்
சேவகா என்று திருநீறு அணிவார்க்கு
மேவ வராதே வினை"

திருச்செந்தூர் முருகப் பெருமானை அகத்திய முனிவர் வணங்கி உபதேசம் பெற்றார். இதனை அருணகிரிநாதர் "கும்ப முனி கும்பிடும் தம்பிரானே" எனப் பாடுகின்றார்.

திருச்செந்தூரை வந்தடைவோர்க்குச் சாகாவரமும் தந்திடும் உடம்பில் போகப்பீடை போக்கி ரக்ஷிக்கும், வறுமை நீங்கும், வாழ்வு உண்டாகும் எனத் திருச்செந்தூர் அகவல் கூறுகின்றது.

சண்முக விலாச மண்டபத்தில்

எழுதியுள்ள பாடல்கள்

விநாயகர் வணக்கம்

(திருமந்திரம்)

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றினை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே. 1

கந்தபுராணம்

ஊரிலான் குணங் குறியிலான் செயலுலான் உரைக்கும்
பேரிலான் ஒரு முன்னிலான் பின்னிலான் பிறிதோர்
சாரிலான் வரல் போக்கிலான் மேலிலான் தனக்கு
நேரிலான் உயிர் கடவுளாய் எண்ணுளே நின்றான். 2

கந்தரனுபூதி

எந்தாயு எனக் கருள் தந்தையு நீ
சிந்தா குலமானவை தீர்த் தெனையாள்
கந்தா கதிர்வேலவனே உமையாள்
மைந்தா குமரா மறை நாயகனே. 3

முருகன் குமரன் குகன் என்று மொழிந்து
உருகுஞ் செயல்தந்து உணர்வென்று அருள்வாய்
பொருபுங்க வரும் புவியும் பரவும்
குருபுங்கவ எண்குண பஞ்சரனே. 4

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே. 5

திருமுருகாற்றுப்படை

(வெண்பா)

முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே—ஒருகை முகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைத்தொழுவேன் நான். 6

உன்னையொழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை யொருவரை யான் பின்செல்லேன் பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்தில் வாழ்வே. 7

குன்றம் எறிந்தாய் குரைகடலில் சூர் தடிந்தாய்
புன்றலைய பூதப் பொருபடையாய்—என்றும்
இளையாய் அழகியாய் ஏறுந்தான் ஏறே
உளையாயென் னுள்ளத் துறை. 8

வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேல் திருக்கைவேல்—வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர் மார்பும் குன்றும்
துளைத்த வேல் உண்டே துணை. 9

அஞ்சு முகம்தோன்றின் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சல் என வேல் தோன்றும்—நெஞ்சில்
ஒருகால் நினைக்கில் இருகாலும் தோன்றும்
முருகா என்று ஓதுவார் முன். 10

கந்தபுராணம்

அருவமும் உருவமாகிய யநாதியாப் பலவாய் ஒன்றாய்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகிக்
கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டும்
கொண்டே
ஒருதிருமுருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய 11

முவிருமுகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவரும் துதிக்கநின்ற ஈராறுதோள் போற்றி காஞ்சி
மாவடிவைக்கும் செவ்வேள் மலரடி போற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல்
போற்றி போற்றி 12

மறைகளின் முடிவால் வாக்கால் மனத்தினால்
அளக்கொணமல்
நிறைவுடன் யாண்டுமாகி நின்றிடு நிமலமூர்த்தி
ஆறுமுக உருவாய்த் தோன்றி அருளொடு சரவணத்தின்
வெறிகமழ் கமலப்போதில் வீற்றிருந்து அருளினனே 13

கந்தர் அலங்காரம்

(22-வது பாட்டு)

மொயிதார் அணிகுழல் வள்ளியை வேட்டவன் முத்
வைதாரையும் அங்குவாழ வைப்போன் [தமிழால்
வெய்ய வாரணம்போல்
கைதான் இருபதுடையான் தலைபத்தும் கத்தரிக்க
எய்தான் மருமகன் உமையாள் பயந்த இலஞ்சியமே 14

(90-வது பாட்டு)

மாலோன் மருகனை மன்றாடி மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை
மேதினியில்
சேலார் வயல் பொழில் செங்கோடனைச் சென்று-
கண்டு தொழ
நாலாயிரம் கண் படைத்திலனே அந்த நான் முகனே 15

(38-வது பாட்டு)

நாள் என்செயும் வினை தான் என்செய்யும் எனைநாடிவந்த
கோள் என்செய்யும் கொடுங்கூற்று என்செயும் குமரேசர்
இரு
தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்கு முன்னே வந்து
தோன்றிடினே 16

(70-வது பாட்டு)

விழிக்குத்துணை திருமென்மலர்ப் பாதங்கள்
மெய்மைகுன்றா
மொழிக்குத் துணை முருகா என்னும் நாமங்கள்
முன்பு செய்த
பழிக்குத்துணை அவர் பன்னிரு தோளும் பயந்ததனி
வழிக்குத்துணை வடிவேலும் செங்கோடன் மயூரமுமே 17

கந்தபுராணம்

(காச்சியப்ப சிவாச்சாரியார்)

தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுன்புற்றால்
தூயவராகி மேலைத்தொல்கதி யடைவர் திண்ணம்
ஆயது வேண்டும் கொலோ அடுசமர் அந்நாள்செய்த
மாயையின் மகனுமன்றோ வரம்பிலா அருள்
பெற்றுய்ந்தான் 18

புன்னெறி யதனிற் செல்லும் போக்கினை விலக்கி மேலாம்
நன்னெறி யொழுகச்செய்து நவையறு காட்சிநல்கி
என்னையும் யடியனாக்கி இருவினை நீக்கியாண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல் பாதபங் கயங்கள்
போற்றி 19

கோலமா மஞ்ஞை தன்னிற் குலவிய குமரன் தன்னைப்
பாலனென் றிருந்தேன்
அந்நாட் பரிசிவை யுணர்ந்திலேன் யான் மாலயன்-
வானவர் தமக்கும் ஆர்க்கும் [தனக்குமேனை
மூலகாரணமாய் நின்ற மூர்த்தி இம்மூர்த்தியன்றே 20
ஆயிரம் கோடி காமரழகெலாம் திரண்டொன்றாகி
மேயின வெனினும் செவ்வேள் விமலமாஞ் சரணந்தன்னின்
தூயநல்லெழிலுக் காற்றாதென்றிடில் இனையதொல்லோன்
மாயிருவடிவிற்கெல்லாம் உவமையார் வகுக்கவல்லார். 21

கந்தர் அலங்காரம்.

சேல்பட்டழிந்தது செந்தூர்வயல்பொழில் தேங்கடம்பின்
மால்பட்டழிந்தது பூங்கொடியார் மனம் மாமயிலோன்
வேல்பட்டழிந்தது வேலையும் சூரனும் வேற்பும் அவன்
கால்பட்டழிந்தது இங்கு என் தலைமேல் அயன
கையெழுத்தே. 23

சேந்தனை கந்தனை செங்கோட்டுவெற்பனை செஞ்சுடர்வேல்
வேந்தனை செந்தமிழ் நூல் விரித்தோனை விளங்கு வள்ளி
காந்தனை கந்தக் கடம்பனை கார்மயில் வாகனனை 24
சாந்துணைப்போதும் மறவாதவர்க்கொரு தாழ்விலையே.

கந்தர் அனுபூதி

ஆடும் பரிவேல் அணிசேவல் எனப்
பாடும் பணியே பணியாய் அருள்வாய்
தேடுங் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனியானை சகோதரனே 25
ஆதார மிலேன் அருளைப்பெறவே
நீதா னொரு சற்றும் நினைந்திலையே
வேத ஆகம ஞான வினோத மனோ
தீதா சுரலோக சிகாமணியே 26

செறிதொறும் உயிர்தொறும் திகழ்ந்து மன்னியே
மறுவறும் அரன் இட மரபின் மேவியே
அறுவகை நெறிகளும் புறவும் ஆக்கிய
இரைவி தன் மலரடி இறைஞ்சி ஏத்துவோம். 27

உலகெல்லாம் உணர்ந் தோதற் கரியவன்
நிலவுலாவிய நீர் மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம். 28

திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ்

(பகழிக்கூத்தர் பாடியது)

பேரா தரிக்கும் அடியவர் தம்
பிறப்பை ஒழித்துப் பெரு வாழ்வும்
பேறுங் கொடுக்க வரும் பிள்ளைப்
பெருமா னென்னும் பேராளா
சேரா நிருதர் குலகல கா
சேவற் கொடியாய் திருச்செந்தூர்த்
தேவா தேவர் சிறை மீட்ட
செல்வா என்றுன் திருமுகத்தைப்
பாரா மகிழ்ந்து முலைத்தாயர்
பரவிப் புகழ்ந்து விருப்புடனப்
பாவா வாவென் றுனைப் போற்றப்
பரிந்து மகிழ்ந்து வரவழைத்தால்
வாரா திருக்க வழக்குண்டோ
வடிவேல் முருகா வருகவே
வளருங் களபக் குரும்பை முலை
வள்ளி கணவா வருகவே 29

திருப்பள்ளியெழுச்சி

வெற்றி வேற்கரமுடையாய், எமையுடையாய்
விடிந்ததுன் பூங்கழற்கிணை மலர் கொண்டு
சுற்றிய அடியேங்கள் தூய்மனத்துடனே
சொல் மகிழ்வுடன் நின் திருவடி தொழுவோம்,
தெற்றிய கமலங்கள் அலரும் தண் வயல் சூழ்
திருச் செந்திலம்பதி வாழ் முருகோனே
எற்றுயர் சேவற் பதாகையை யுடையாய்
எம் பெருமான் பள்ளிஎழுந்தருளாயே.

கீழ்த்திசை அருணனும் கிளரொளி வீச
கிளி மயில் குயில் காகம் சேவல்கள் கூவ
காரிருள் நீக்கிடும் கதிரவன் வரவும்
கடிமா மலருடன் ஏந்திய கையார்,
தாழ்ந்திடு சென்னியர் தவமுடை பெரியோர்
தனித்தனி நாமங்கள் புகலுவார் நாவில்
ஏழிசை பரவும் நற் செந்திலம் பரனே
எம் பெருமான் பள்ளி எழுந்தருளாயே.

வெண் சங்கமுழங்கின விசையொலி பேரி
வித வித வாத்தியங்கள் ஒலித்தன பலவால்
தண்ணருள் சுரந்திடும் தளிர்மலர்ப்பாதங்கள்
சார்ந்துடன் தெரிசிக்க யாவரும் வந்தார்,
பண்ணிசை வேதியர் வேதமுழங்கி
பனிமலர்த் தூவியே பரவினர் மருங்கில்
எண்ணரும் செந்தியில் இசைந்தமர் முருக
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே.

பால்க்குடம் காவடி பக்தர்கள் ஒருபால்
பரிவுடன் வழிபடும் அன்பர்கள் ஒருபால்

நாற்றிசையோர் திரை கொணர்ந்தனர் ஒருபால்
நலமுடன் தமிழ் மறை ஒலிப்பவர் ஒருபால்,
பாற்கடல் துயின் ருேனும் பிரம்மனும் ஒருபால்
பண்புடன் ஊர்வசி அரம்பையர் ஒருபால்
ஏற்குரும் ஒளி திகழ் செந்திலமர்ந்தோய்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே.

பஞ்ச பூதங்கள் யாவும் பரவி நின்ருேய் என்றும்
பார்க்குமிடந்தோறும் பண்புற அமர்ந்தாய்
எஞ்சலில் இசையுடன் ஏற்றுதல் அல்லால்
என்புருகவும் நினைக் கண்டறியோம், யாம்
தஞ்ச மென்றடியவர்க் கருளும் செந்தூரா
சதுர் மறை யூடுறை ஷண்முகநாதா
எஞ்சிய பழவினை அறுத்தெமையாண்ட
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே.

செப்பரும் அடியவர் தனியிருந்துணர்வார்
செய்வினை யகற்றிடுவார் தவர் பலரும்
ஒப்பரும் இருடிகள் தம்மனை யோடும்
உவமையில் ஜெபத்தோடு ஒன்றியே அமர்ந்தார்,
செய்ப்பெறும் நீள்வயல் சூழ்திருச்செந்தூர்
சிறப்புடன் அமர் சிவசுப்பிரமணியா
எப்பிறப்பினும் உனை ஏந்திட அருள்வாய்
எம் பெருமான் பள்ளி எழுந்தருளாயே.

தேனினி தெனக்கண்டு பால் இனிதெனவே
செப்புகின்ற அமுதம் இனிதென உணரார்
மானமர் திருவடி படிமிசை உறவே
வந்தெமை ஆண்டிட இங்கெழுந்தருளும்.
மேல் நிமிர் சோலை சூழ் செந்திலம்பதி வாழ்
வேலனே சீலனே விஞ்சையர் கோனே
ஞானவடிவே எமை ஆட்கொண்ட கோவே
நாதாந்தனே பள்ளி எழுந்தருளாயே.

ஆதி நடுவும் அந்தமாகியும் நின்ருய்
அரி அயன் அறியார் யாருனை அறிவார்
ஜோதி வடிவாம் இரு தேவியும் நீயும்
தொல் புகழ் அடியார்க் கருள் செயும் பரனே,
ஓதிய மறை புகழ் உருவினைக் காட்டி
உயர் திருச்சீரலைவாய் நகர் காட்டி
வேதிய ராவதும் காட்டி வந்தாண்டாய்
விமலனே திருப்பள்ளி எழுந்தருளாயே.
வானகத் தேவரும் வழிபடும் நின்னை
மாபொருளே நிதம் வாழ்த்திட என்றும்
மான இப்புவிதனில் வந்தமர் வாழ்வே
மன்னு செந்தூரா வழி வழி யடியோம்.
ஊனகத்துலவி நின்ருளிரும் செந்தேனே
ஒளிக் கொளியா யென்றும் பரவும் அடியார்
ஞான அகத்தினில் நன்ருளிராஞய்
நல்லமுதே பள்ளி எழுந்தருளாயே.
அவனியிற் பிறந்து நாம் ஆய்வறிவில்லா
ஆன காலம் வீணுய் போக்கினேம் அவமே
சிவகுமரா யாங்கள் உய்ந்திட நினைந்து
சீரலைவாய் உறைவாய் அயன் மாலாம்.
புவிதனில் போற்றவும் புகழவும் நின்ருய்
புண்ணியனே நின்கருணையும் நீயும்
தவமிலா சிறியேமை தடுத்தாள வல்லாய்
தயாபரனே பள்ளி எழுந்தருளாயே
ஆறிருதடந்தோள் வாழ்க ஆறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய்தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்க சீரடியார் எல்லாம்.

அஞ்சேல், அஞ்சேல்,
அஞ்சுவோர்க் கபயமளிக்குஞ் சரவணனிருக்க
அஞ்சேல்—அஞ்சேல்
வேலுண்டு—வினையில்லை
கந்தனுண்டு—கவலையில்லை
மயிலுண்டு—பயமில்லை
குகனுண்டு—குறைவில்லை
செந்தில் வாழ் கந்தனின் திருவடி பணிவோம்.
மங்களம்—சுபம்.

உ

முருகா

ஸ்ரீ வீரவாகு தேவர் உந்தீபற.

பார்வதி பாதச்சிலம்பில் உதித்திடும் தார்வீரபாகு
என்றுந்தீபற
ஷண்முகன் தம்பி என்றுந்தீபற
நாரதர் யாகத்தில் வந்த தகரினை சிறிப்பிடித்தானென்
றுந்தீபற
தேவரைக்காக்க வென்றுந்தீபற
இந்திரன் மைந்தனை கண்டிதம் சொல்லியே வந்தான்
சூர்சபை யென்றுந்தீபற
வாதாடினனெவுந்தீபற
தூதனைக் கட்டிப்பிடியெனச்சூரனும் ஏதமாய் சொன்ன
னென்றுந்தீபற
எழுந்தாரவுண ரென்றுந்தீபற
வந்த அசுரருடன் சூரன்மாநகர் சிந்த அழித்தான்
என்றுந்தீபற
திருச்செந்தில் வந்தானென்றுந்தீபற
சிங்கன் மைந்தன் பானுகோபன் எரிமுதன் அங்கம்
அறுத்தானென்றுந்தீபற
ஆர்வமுடனே என்றுந்தீபற
சூர் ஏறிவரும் தேரிற் சென்று வீரனும் தார்வீல்
துணிந்தானென்றுந்தீபற
சதுரன் என்றைக்கு மென்றுந்தீபற
மண்ணவர் விண்ணவர் யாரும் புகழ்ந்திட அண்ணலாம்
வீரனென்றுந்தீபற
அறுமுகதாஸன் என்றுந்தீபற
தாய் வள்ளி தெய்வானை நாதன் சரணங்கள் ஆய்ந்து
பூஜித்தானென்றுந்தீபற
அறிவிற் கறிவன் என்றுந்தீபற
சட்டைபிட்டமுது சாத்தும் அடியார்க்கு இஷ்டம்
அளிப்பானென்றுந்தீபற
எங்கள் வீரபாகு வென்றுந்தீபற எங்கள் வீரபாகு
என்றுந்தீபற.

முருகா

DOSS PRESS
NAGERCOIL.